COUNTRY HERALD.

கிராம தூதன்.

கௌரவ பத்திராதிபர்:

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, சிவில்லிபுத்தூர்.

1942 மே

மலர்-௪ இதழ்-௫

வாழ்க்கை முறை.

1. நாம் பிறர் ஆக்கத்துக்குத் துணையாகவும் வாழவேண்டும்; அது முடியாது போயினும், பிறர் கேடு சூழாதேனும் வாழவேண்டும். பிறர்க்கின்னா நாம் முற்பகலில் நினைக்க, நமக்கின்னா பிற்பகலிலேயே திட்டமாக விளைகிறது. ஆதலால், பிறரைக் கெடுத்து வாழ நாம் நினைத்தலுங்கூடாது.

நம் பெற்றோர்கள் நம்மை வளர்த்துவிட்டபடி, நாமும் இவ்வுலக வளர்ச்சிக்காக நம் மக்களை வளர்த்துவிட வேண்டும். நாம் பிறந்த இவ்வுலகை, நாம் பிறந்த காலத்திலும் செம்மையுறச் செய்திடவும் வேண்டும்.

நாம் நம் குடும்பத்தினருக்குக் கைம்மாறு கருதாதும் உதவிவருவதுபோல, இவ்வுலகமாம் பெருங் குடும்பத்தினருக்கும் நாம் உதவிவரும் அளவிற்கே, இவ்வுலகம் நாம் வாழ்வதற்கேற்ற இடமாகும். பிறருக் குதவியில்லா நாட்டிலும் கொடும்புலி வாழுங் காடும் நன்றேயாகும்.

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை.

நமக்கு ஏழை ... ர்கள்; இனி, ... உழைத்தாக ... றப்படி ஒழு ... r மக்களும் ... லாம்; தவறி ... பது திண்ணம்.

...திரநாத் தாக்கூர்.

SL
731 m 2155, N39GT
N 42.4.5
207597

சுழன்றும், ஏர்ப்பின்னது உலகம்—திருவள்ளுவர்.

விசேடக் கட்டுரைகள்.

1. பிச்சைக்காரர் தொல்லை ஒழியாதா?
2. பலவேறுவகை நிலங்களையும் செழிக்கச்செய்வதெப்படி?
3. குழந்தைகளின் மனக்கிளர்ச்சிச் சங்கடங்கள்.
4. குழந்தைகளின் பொய்கள்.

[உட்பக்கம் பொருளடக்கம் பார்க்க.]

பிரசுரகர்த்தர்:

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	கடவுள் வணக்கம் : பிரார்த்தனை.	129
2.	பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.	130
3.	பிச்சைக்காரர் தொல்லை ஒழியாதா? II	131
4.	பலவேறுவகை நிலங்களையும் செழிக்கச்செய்வதெப்படி?	133
5.	கூட்டுறவுப் பதிவாளரின் ஆண்டறிக்கை, 1940—41.	135
6.	குழந்தைகளின் மனக்கிளர்ச்சிச் சங்கடங்களும் அவற்றிற்குப் பரிகாரமும். ...	139
7.	நம் மாகாணக் குடிசைத் தொழில்கள்.	141
8.	அ. குழந்தைகளின் பொய்களும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளும்.	143
	ஆ. உடற்கூறு, மருத்துவம், உணவு வாழ்க்கைக் குறிப்புக்கள்.	145
9.	கிராமச் சீரமைப்பு II.	147
10.	இரண்டு அடியார்கள்.	150
11.	செய்தித் திரட்டு:	
	அ. உழவு, நெசவு, வாணிபம் முதலிய தொழிற் செய்திகள்.	151
	ஆ. கூட்டுறவுக் கல்வி சுகாதாரச் செய்திகள்.	153
	இ. கிராம முன்னேற்ற தலதாபன அரசாங்கச் செய்திகள்.	154
	ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள்.	,,
12.	அறிவுரைத் திரட்டு:	
	அ. உழவு, நெசவு, வாணிபம் முதலிய தொழிற் குறிப்புக்கள்.	155
	ஆ. கிராம முன்னேற்ற தேசமுன்னேற்றக் குறிப்புக்கள்.	156
	இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனுமுறையாராய்ச்சிக் குறிப்புக்கள்.	157
	ஈ. சிறந்த வாசகங்கள், செய்யுள்கள், அறவுரைகள், பழமொழிகள்.	158

புத்தகங்கள், பத்திரிகைகள், அறிக்கைகள் வரவு.

கீழே காணும் பிரசுரங்களைப் பெற்றிருக்கிறோம்; அவற்றை உதவியவர்களுக்கு நம் நன்றியையும் செலுத்திக்கொள்ளுகிறோம்.

1. Indian Information, No. 90-91.
2. Bombay ,, Vol iii Nos. 11-14.
3. Mysore ,, Vol v No. 3.
4. Hyderabad Press Notes etc.
5. Madras Press Notes, Nos. 64-82.
6. Director of Agriculture Press Note.
7. *கூட்டுறவு மலர்* 13. *இதழ்கள்* 19-20.
8. *வித்தியாதனம் தொகுதி* 7. *இதழ்* 1.
9. *போதனு முறைக் கொத்து* 32. *எண்* 10.
10. *பிரசாதார் தொகுதி* 8. *பகுதி* 7.
11. *நல்வழி மலர்* 31. *இதழ்* 4.
12. *வர்த்தக ஊழியன் எண்* 117.
13. *செந்தமிழ்ச் செல்வி சிலம்பு* 19. *பரல்* 12.
14. *ஞானசம்பந்தம் தொகுதி* 1. *பகுதி* 5.
15. *தமிழணங்கு தொகுதி* 1. *பகுதிகள்* 8-10.
16. *சமத்தொழில்விளக்கம் தொகுதி* 40. *பகுதி* 2.
17. Village Republic, Vol 2, Nos. 5-8.
18. *திராவிட நாடு மலர்* 1. *இதழ்* 4.
19. Monthly Bulletin of the Bangalore Dairy cattle society.
20. Annual Administration Report of the Rural development and Panchayat department, Jamna and Kashmir 1941.
21. Rural Development in Jamna and Kashmir 1937-1941.
22. Development in Rural Kashmir in the lens light-Rural Development department 1941.

THE COUNTRY HERALD

கிராம தூதன்

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்."

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, *கௌரவ பத்திராதிபர்*, ஸ்ரீவில்லிபுத்தூர்.

மலர்: ச	**1942, மே—சித்திரபானு, வைகாசி**	*இதழ்: ரு*

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை

அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய் அருள்நோக்கில்
    தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்,
எத்தனையும் அரையைநீ எளியை யானாய்
    எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்,
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
    பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே,
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
    எம்பெருமான் திருக்கருணை யிருந்தவாறே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

உழவின் சிறப்பு

உணவு புசித்து உயிர்ப்பதிவ் உலகம்—ஆனால்
உணவை மறந்தால் உழல்வதிவ் உலகம்—அதுபோல்
உழவைப் புரிந்து உயர்வார்கள் மனிதர்கள்—ஆனால்
உழவை மறந்தால் உழல்வார்கள் மனிதர்கள்.

இது ஒவ்வொருவரும் மனனம்பண்ணிக்கோள்ள வேண்டிய பாடல்.

ஓர் கிராமவாசி.

2. பொன்னுரைகள் : பொறுக்குமணிகள்

I. நாடாளி னென்ன, நகராளி னென்ன, நரர்க்குச் செல்வம்
கோடானு கோடி யிருந்தென்ன, மேனியிற் கோட்டழகு
வாடா திருந்தென்ன, வாயாத் திறம்பல வாய்த்து மென்ன,
ஈடாகுமோ உள்ளன் பில்லாக் குறைக்கவை, எண்ணிடினே?

—திருவனந்தபுரம் இலட்சுமணபிள்ளை.

நாடு ஆளின் என்ன? நகர் ஆளின் என்ன? நகர்க்குச் செல்வம் கோடானு கோடி இருந்தென்ன? மேனியில் கோட்டழகு வாடாது இருந்தென்ன? வாயாத்திறம் பல வாய்த்தும் என்ன? எண்ணிடின், உள் அன்பு இல்லாக்குறைக்கு அவை ஈடாகுமோ?

II. 1. எல்லாம் நன்மையே என்று எண்ணுகிற எண்ணம் பிறருக்கும் தோற்றக்கூடியது. இக் குணமுடையோருக்கு மகிழ்ச்சியும் பெருகும்; அது சுகத்தைப் பெருக்கி ஆயுளையும் நீளச் செய்யும். மகிழ்ச்சியுள்ளவன், நற்குணமுள்ளவன். நற்குண மனிதன் சதா நன்மையே விளைவிப்பான். அதைரியத்தையும் தோல்வியையும் சந்தேகத்தையும் அலட்சியம் செய்யும் மனம், சதா மகிழ்ச்சியுறும். விவேக விகடம், மனதுக்கும் உடலுக்கும் பலன் தரும். சிரிப்பு ஆன்ம மருந்து. எதிலும் நன்மையைக் காண்கிற மனம் நம்பிக்கையையும் தைரியத்தையும் நிச்சயத்தையும் பெருக்க வல்லது. எதுவும் நன்மைக்கென எண்ணும் புத்திக் கூர்மை, மனிதனைப் பெரிதும் யோக்கியமான காரியங்களுக்குச் செலுத்துகிற சிறந்த வல்லமை யென்றறிவாயாக.

நல்வழி —சாமுவேல்.

2. இல்லாததைச் சொல்பவரும், இதனை நான் செய்தேன் என்று இறுமாப்பு அடைபவரும் துன்பத்தையே அடைகிறார்கள். சென்றதையும் இனிச் சேருவதையுங் கருதாதே; நீ செய்ய இருப்பதைப் பயன் கருதாமல் செய். இதுவே விடுதலைக்கு மார்க்கம்.

—நல்வழி.

3. ஒரு தேசம் சீர்பெற்று நாகரிகமடைந்து பெருமை பெறவேண்டுமானால், அத் தேசத்தின் தனித்தனிச் சமுகமும் சீர்திருத்தமடைய வேண்டும். சமுக சீர்திருத்தமே தேசத்தின் சீர்திருத்தமாகும், அந்தந்தச் சமுகத்துக்கு அந்தந்தச் சமுக மக்களே சொல்லுதல் வேண்டும், அதுதான் மதிப்பிற்குரியதும் பயன்பெறுவதுமாகும்.

(இளைஞருக்கு ஆலோசனை)

—மு. சின்னையா செட்டியார்.

III. 1. செந்தமிழ் வழங்கும் நந்தமிழ் நாட்டில் தமிழ் மொழியைத் தாய்மொழியாகவுடையவன், தமிழைக் கட்டாயம் படிக்க வேண்டுமென்கிற சட்டமில்லையே! இதனை விட நம் நாட்டிற்கு என்ன இழிவு வேண்டும்?...... இனிமேலாவது, அரசியலார் விரைந்து தமிழைக் கட்டாயப் பாடமாக்க முற்படுவார்களாக.

2. வங்காளி, குசராத்தி முதலிய மொழி பேசும் நாட்டினரை நோக்குங்கள்; அவர்கள் ஒருவரை ஒருவர் காணும்பொழுது, அவர்கள் தம் தாய் மொழியிலேயே பேசுவார்களேயன்றிப் பிறமொழிகளில் பேசார். நம் தென்னாட்டிலும் தெலுங்கர்களும், மலையாளிகளும் அங்ஙனமே செய்வார்கள். அவர்களைப் பார்த்தாவது தமிழன் தாய்மொழியினிடத்துப் பற்றுக் கொள்ள வேண்டாமா?

3. தமிழ் வளர வேண்டுமானால், தமிழில் பல கலைகளும் வளரவேண்டும்; கலைகள் வளர வேண்டுமானால், அவற்றைத் தமிழர்கள் பயில வேண்டும்; பயில்வதனால், தமிழர் அறிவு நிரம்புவர்; அறிவு நிரம்பினால், தமிழர் ஆண்மையும் வீரமும் உணர்ச்சியும் முயற்சியும் உரிமையும் எய்தி எல்லாவற்றிலும் முன்னேற்றமடைவர். தமிழர் முன்னேறினால், தமிழ் நாடு முன்னேறுமென்பதில் ஐயம் வருமோ?

தமிழை வளர்ப்பதெப்படி?

3. தலையங்கம் :

பிச்சைக்காரர் தொல்லை யொழியாதா?

II

இங்கிலாந்தில் எவருக்கும் வேலை கிடைக்காதிருந்தால், அரசாங்கமே அவருக்கு வேலை தரவேண்டுமென்றும் அல்லது அவருக்குச் சோறேனும் போட்டுவரவேண்டுமென்றும் எக்காரணத்தையிட்டும் எவரும் பிச்சையெடுக்கக் கூடாதென்றும் சட்டமிருப்பதாகவும் அப்படியெல்லாம் இருந்தும் அங்கேயும் சிலர் ஏகதேசம் உபாயமாகப் பிச்சையெடுத்து வருகிறார்களென்றும் சென்ற இதழில் விவரித்தோம். பொதுவாகப் பிச்சைக்காரர் கூட்டம் பெருகுவதற்கான காரணங்களையும், சிறப்பாக நம் நாட்டின் நிலைமையையும் போக்கையும் இப்பொழுது கவனிப்போம்.

கூடுமானால், உழையாமல் உண்ண விழைவதே மனித சுபாவம். குளிர் நாட்டில் விறைக்காதிருக்கவேனும், உழைக்க வேண்டியதிருக்கிறது. அங்கே பணக்காரரும் உழைக்கின்றனர், எல்லாரும் உழைக்கின்றனர். நம் நாடு போன்ற வெப்ப மிகுந்த நாட்டிலோ, உழைப்பினால் சோர்வு அதிகமாவதால், அதனை உள்ளூரவேனும் வெறுக்காதிருக்க முடிகிறதில்லை. உழைத்தும் குடும்பச் செலவிற்குப் போதிய பணம் கிடைத்தற்கில்லாத பொழுது, அதனை விரும்பவுங் கூடியதில்லை.

இளமையில் பெற்றோரை இழந்து விடுவதாலோ மற்றப்படிக்கோ அனாதரவாக வளரும் குழந்தைகள் சமுகக் கட்டுப் பாட்டுக்கு—அடங்கலுக்குப் புறத்தவராக வளர்கின்றனர். அவர்களும் செல்வமாக வளர்கிறவர்களும் இளமையில் உடம்பை வளைக்கிறதுமில்லை; பிறகு, அவர்களால் உழைக்க முடிகிறதுமில்லை. ஆதலால், அவர்கள் உழைப்பை விரும்புகிறதில்லை.

ஒரு சிலர் அதிகச் செலவும் சிரமமுமில்லாமல் பலவகை அனுபவமும் அடைய விரும்புகின்றனர். பிச்சை யெடுத்துத் திரிவதால் (Begging lust) அத்தகைய அனுபவமும் அமையக்கூடுமென்று நினைக்கின்றனர். ஆதலால், அவர்கள் பிச்சை யெடுப்பதை மானக்குறைவான காரியமாக நினைப்பதில்லை; பிச்சை யெடுப்பதையே தங்கள் வாழ்க்கைத் தொழிலாகவும் கொண்டு விடுகின்றனர்.

அவர்கள் போலவே, இன்னும் சிலர் பல ஊர்களையும் விநோதங்களையும் (Wandering lust) காண விரும்புகின்றனர். அஃது, ஊரூராகப் பிச்சை யெடுத்துத் திரிவதினாலேயே எளிதாகச் சாத்தியமாகக் கூடுமென்றும் நினைக்கின்றனர். ஆகையால், அவர்களும் பிச்சை யெடுப்பதை மானக்குறைவான காரியமாகக் கருதாமல், தங்கள் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு விடுகின்றனர்.

அனேகமாக உலகமெங்கும், நம் நாட்டிலும் போட்டியே வெகுவாகப் பரவி வருகிறது. தன்னலமே போட்டிக்குக் காரணமாதலால், தன்னலம் வளர வளர உண்மையும் (Sincerity, honesty and truth), நேர்மையும் (Righteousness) குறைகின்றன. ஒரு சிலர் உழைக்காமலும் பணக்காரராவதற்கு வழியாகிறது; அப்படி ஒரு சிலர் பணக்காரராகி வர வர, பலர் நாளுக்கு நாள் கூலிக் குறைவாலும் பலவீனத்தாலும் அதிக ஏழைகளாகவும் ஆகின்றனர். இப்படியாக, உழைப்பிலும் உண்மையும் நேர்மையும் அருகிப் போகின்றன. நல்ல உழைப்பாளிகளும், ஒரு சில முதலாளிகளை யொட்டியோ அவர்களைப் போலவோ நாமும் ஏன் உழையாமல் உண்டு வரக்கூடாதென்று நினைக்கவும் ஆரம்பிக்கின்றனர். அந்த நினைப்புச் சோம்பேறிக் கூட்டத்தைப் பெருக்குகிறது. அந்தக்கூட்டம் முதலாளிகளுக்குத் துணையாக இருந்தும் அல்லது முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் விரோதமாகக் கிளர்ச்சிகள் செய்தும் வாழ முயலுகிறது; கிளர்ச்சிகளுக்காகப் பணமுந் திரட்டுகிறது; கிளர்ச்சிகளும் நடக்கின்றன. கிளர்ச்சிகள் பயன்படாது போகவும், அவர்களில் அனேகர் வேலை கிடையாமலும் வேலை செய்ய விளக்கமில்லாமலும் போகின்றனர்.

போட்டிமுறைப் பெருக்கால், இன்னொரு பெருங்கேடும் விளைகிறது. உண்மையும் நேர்மையும் குறைந்து வர வர; நிதானமும் (Judgment) பிறருக்குதவியும் (Service) தன்னல மறுப்பும் கொடையும் (Sacrifice) குறைகின்றன. இவற்றோடும் நிற்காமல், பிறரை மதியாமல்—தன்னையும் தன் யோசனையையுமே பெரிதென நினைக்கும் நினைவும் வளருகிறது. இந்த நினைப்பையே உலகம் அகம்பாவமென்று பழிக்கிறது. என்றாலும், போட்டியால் வளரும் இந்த அகம்பாவமும் போட்டியை வளர்த்து வரும் பொறாமை போலவே எவரையும் அவருக்கும் தெரியாதபடி ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறது. அதன் ஆதிக்கம் பிறருக்கும் வெகு வெகு நுட்பமாகக் கவனித்தாலன்றித் தெரிவதில்லை.

அறிவும், பணமும் பெற்றிருப்பவர்கள் தங்களுக்கு இலாபகரமான காரியம் (Self-interest) இன்னதெனவும் தெரிந்திருக்கின்றனர். எவரும் தனக்கு நிகரில்லை யென்றெண்ணச் செய்யும் இந்த உணர்ச்சியும் அவர்களுக்கு நன்மையே பயப்பிக்கிறது. பிறரெவரையும் போலவும் அதற்கும் மிச்சமாகவும் தாங்களும் சம்பாத்தியம் செய்யக்கூடுமென்று நினைக்கவும் அவர்களைத் தூண்டுகிறது. தனித்தும் தன்னைப் போன்ற பிறரோடு சேர்ந்தும் பணந்திரட்டவும் அவர்களுக்குதவுகிறது.

இன்னுஞ் சிலர் அதிகாரத்தையும் பெருமையையும் அடைதலையே (Achievement of power and glory by mere propaganda) பெரிதாக நினைத்து மாநாடுகள் கூட்டங்கள் கூட்டி மேடைகளேறிப் பேசியும் பத்திரிகைகளில் எழுதியும் சிறை சென்றும் வருகின்றனர். பணந்திரட்டுதலினால், இவையிரண்டையும் அடையக்கூடு மென்பதையும் அவர்கள் கருதுவதில்லை. வறுமையும் எழுத்தறிவின்மையும் எங்கும் எல்லா இனங்களினும் அதுவும் பின்னடைந்திருக்கும் வகுப்புக்களில் வெகுவாகவும் இருப்பதால், இவற்றைத் தவிர்க்கும் வேலையே நாட்டில் ஒற்றுமையை வளர்க்கக்கூடு மென்பதையும் கருதுவதில்லை. நாட்டில் உண்மையும் நேர்மையும் உழைப்பும் உழைப்பிற்கான திறமையும் அறிவும் வளர வளர நிதானமும் பிறருக்குதவியும் தியாகமும் ஒற்றுமையும் வளரக்கூடு மென்பதையும் இவற்றை இப்போதைய நிலைமையிலும் சாதி சமய பேதமின்றிச் சாத்தியமாகும் அளவிற்குப் பெருக்குவதால் அவர்கள் விரும்பும் அரசியல் சுதந்தரங்களும் சமூகத்திருத்தங்களும் எளிதில் சித்திக்கக் கூடுமென்பதையும் உணருவதில்லை. காந்தியடிகளின் ஆக்கவேலைத் திட்டத்தின்படிக்கேனும் வேறெந்த ஆக்க வேலையேனும் செய்வதுமில்லை. பிரஞ்சுப் புரட்சியில், முன் யோசனையாக எதொரு திட்டமும் வகுத்துக்கொள்ளாமல், அரசனைக் கொன்று குடியரசைப் பிரகடனஞ் செய்தது போலவே, இவர்களும் நாட்டை எதொரு திட்டத்திற்கும் தயாரித்துக் கொள்ளாமல் பேசித்திரிகின்றனர். இவர்கள் ஒரே கூட்டமாகவுமில்லாமல், பொறாமையால் மாறுபட்டலையும் பலவேறு கூட்டங்களாகவு மிருக்கின்றனர். இப்படியாக, இவர்கள் இராப்பகல் ஓய்வில்லாமலும் சலியாமலும் செய்துவரும் வாசா கைங்கர்யத்தால் சித்திக்கக்கூடிய பலன் நம்நாட்டைக் கலகத்துக்கும் குழப்பத்துக்கும் கொண்டு போய்ச் சேர்ப்பினும் சேர்க்கும். இந்த நிலைமையில், இந்தக் கைங்கர்யத்திற்கும் இடமில்லாமல் போகும் பொழுது, இவர்களினும் பெரும்பாலார் வேறொரு வேலை செய்வதற்கும் முடியாதவர்கள் ஆவார்கள்.

பலர், தாங்கள் பிழைக்கும் வழி—நல்ல பலன் அடையக்கூடிய வழி யின்னதென்பதையே அறியாதிருக்கின்றனர். அப்படியறியாதிருக்கிறார்களென்பதையும் அவர்கள் உணருவதில்லை; ஆதலால், அதனைப் பிறரிடமிருந்து அறியவும் விரும்புகிறதில்லை; பிறரோடு சேர்ந்தும், தன் நன்மையைத் தேடுவதில்லை; பிறர் சொல்லுவதையுங் கேட்பதில்லை. ஒவ்வொருவரும் அவரவர் போக்கிலேயே தனித்தனியாக வேலை செய்து வருகின்றனர்.

இப்படியாகப் போட்டி முறைப் பெருக்கால், நம் நாட்டாரில் பலர் கெட்டே வருகின்றனர். நம் நாட்டார் அனைவரும் நன்றாக வாழ்வதற்குப் போதிய வசதிகள் நம் நாட்டிலிருந்தும், விளக்கை வைத்துக்கொண்டும் பட்டினியாக இருந்த கதையாகப் பட்டினியாகவும் பல நாளிருந்து வருகின்றனர். பின், சிலர் பட்டினியாகவும் இருக்கமுடியாமல், பிச்சை யெடுக்கவும் துணிந்துவிடுகின்றனர்.

குடும்பத்தைவிட்டு அனாதரவாக விலகும் பெண்களில் சிலர், வேலை செய்யப் பிரியமுமில்லாமல் விளக்கமுமில்லாமல் கடைப் பிசகினால் சுகமாக வாழ்ந்துவிடலா மென்றெண்ணி அப்

படி வாழத்துணிகின்றனர். கொஞ்ச காலம் கழியவும் இரண்டு மூன்று பிள்ளைகளாகவும் அப்படியும் வாழமுடியாமல் பிச்சை யெடுத்தே காலங்கழிக்கும்படியாக நேர்ந்துவிடுகிறது.

நம் நாட்டில் பெரும்பாலார் இந்துக்கள். அவர்களின் தெய்வங்கள் வெறும் ஆண்டியாக, மாயாண்டி இருளாண்டி பழனியாண்டியாக மட்டுமில்லாமல் பிச்சையாண்டி பிச்சாண்டியாகவு மிருக்கின்றன. இப்படியாக, நம் நாட்டார் பலர் போற்றும் தெய்வங்கள் பிச்சை யெடுத்துத் திரிந்த கதைகளும் அவர்களால் திருநாட்களாகக் கொண்டாடப்படுகின்றன. இதனால், பிச்சை யேற்பதற்குங்கூட நம் நாட்டில் ஒரு பெருமை ஏற்பட்டிருக்கிறதே யென்று நாம் வருந்தும்படியாக இருக்கிறது.

நம் நாட்டில் பரம்பரையாகத் தெய்வங்களுக்காகவும் பிச்சை யெடுத்து வருகின்றனர்; அவற்றின் பெயர்களைச் சொல்லித் தங்கள் வயிற்றுக்காவும் பிச்சை யெடுக்கின்றனர். எவருக்கும் இல்லை யென்று சொல்லாது கொடுத்து உதவிவர வேண்டு மென்பதாக நம் நாட்டுப் பெரியோர்களும் சொல்லிவருகின்றனர். அடுப்பேற்றிச் சோறுக்குவதற் கில்லாதவர்கள், நம்மைக் கொடாதவர்க ளென்பார்கள்; அதுகூடா தென்றும் வற்புறுத்துகின்றனர். இப்படியாகப் பாத்திரமறிந்து பிச்சையிடுவ தென்பதும் இல்லையென்றாகிவிட்டது. தற்காலப் போக்கில், ஆசாடபூதிகளும் கல்லுளிமங்கன்களும் அதிகாரிகளும் பிச்சையெடுக்கப் புகுந்திருக்கின்றனர். இவர்களின் பெருக்கால், உண்மையான ஏழைகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவியும் குறைந்தே வருகிறது.

(தொடரும்)

---

4. வேளாண்மை :

பலவேறுவகை நிலங்களையும் செழிக்கச் செய்வதெப்படி?

நிலங்கள் அதிகமாக விளைவதற்கு அவற்றின் செழுமையே முக்கிய காரணம். நிலங்களிலிருக்கும் பலவகைச் சத்துக்களில், வெவ்வேறு பயிர்கள் வெவ்வேறு சத்துக்களைப் பலவேறு அளவில் எடுத்துக் கொள்ளுகின்றன. இவற்றையும் பின் சாகுபடிக்கு வேண்டியனவற்றையும் நிதானித்து உரத்தை நாம் நிலங்களுக்குத் திரும்பச்சேர்க்க வேண்டும்.

நிலங்களின் சத்துக்கள் இயற்கை நிலைமையிலும் சேதப்படுகின்றன. மண் சாரியாயுள்ள நிலங்களின் சத்துக்கள் மற்ற நிலங்களின் சத்துக்களைக் காட்டிலும் அதிகமாகவே அழிகின்றன. நிலத்தின் அமைப்பும் அந்தந்தப் பிரதேசத்தின் வெப்பதட்பமும் மழையின் அளவும் சாகுபடி செய்யும் முறையும் சாகுபடியாகாமல் கிடப்பதும் அழியும் அளவை வகைப்படுத்துகின்றன. இதனை நாம் புன்செய் நிலங்களில் சாதாரணமாகப் பார்க்கலாம்.

நாம், நிலங்களைத் தண்ணீர் பாய்ந்து விளைவன வென்றும் வானவாரியாக விளைவன வென்றும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக, தண்ணீர் பாய்ந்து விளையும் நிலங்களை எடுத்துக்கொள்ளுவோம். இவற்றில் பொதுவாக இரண்டு மூன்று மகசூல்களும் ஒவ்வொரு ஆண்டிலும் சாகுபடி செய்யலாம். அதன் பயனாக இவற்றிலிருந்து அதிகச் சத்துக்களும் எடுக்கப்படும். ஆகையால், இவற்றிற்கு அதிகமாகவும் சத்தை ஊட்டவேண்டியது அவசியமாகும். ஆராய்ச்சியில், நம்முடைய நிலங்களுக்குக் கரிமப்பொருள்களே (குழை சாணம் முதலியனவே) அதிகமாக வேண்டியிருக்கிறதென்று தெரிகிறது. பயிர்களுக்கு முக்கிய உணவாக இருக்கும் காலகமும் (Nitrogen) எரியமுமே (Phosphorus) அதிகமாக எடுக்கப்பட்டிருக்க அனேக இடங்களில் காண்போம். வருடந்தோறும் வெகு காலம் அதிக வெப்பமாகவே இருப்பதால் கரிமப்பொருள்களின் பெரும் பாகம் எரிந்து அல்லது மற்றப்படி இழக்கப்படுகின்றன. ஆகையால், முன் சாகுபடிசெய்திருந்த பயிர், நிலத்திலிருந்து எடுத்துக்கொண்டிருக்கும் சத்தைமட்டும் திரும்ப நிலத்துக்குக்கொடுத்தாலும் போதாது. இப்படி இயற்கையாக இழந்து போயிருக்கும் சத்தையும் நாம் கொடுக்கவேண்டும்; உதாரணமாக, ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து நெற்பயிரானது 48 இராத்தல் காலகமும் 23 இராத்தல் எரிகைக்காடியும்

41 இராத்தல் சாம்பர உப்பும் எடுத்துக்கொள்ளும்; அதுபோல், புகையிலை 67 இராத்தல் காலகமும் 9 இராத்தல் எரிகைக்காடியும் 85 இராத்தல் சாம்பர உப்பும் எடுத்துக்கொள்ளும்; நல்ல கரும்புப் பயிர் 100 முதல் 150 இராத்தல் வரை காலகத்தை எடுத்துக்கொள்ளுவதாகவும் கண்டிருக்கிறார்கள். உருளைக் கிழங்கு வள்ளிக்கிழங்கு முதலிய கிழங்குகளுக்குச் சாம்பர உப்பு நிரம்பத்தேவையாயிருக்கிறது. பொதுவாக, இலைத்தாள் வளர்ச்சிக்குக் காலகமும் அதிகத்தானிய விளைவிற்கு எரிகையும் பயிர் திடமாக வளர்வதற்கும் பலன் உருசியாக இருப்பதற்கும் சுண்ணமும் சாம்பர உப்பும் இடவேண்டும். இப்படியாக, நிலத்தின் செழுமை அதிகமாகக் கெடாதிருந்துவரவேண்டுமானால், ஒரே பயிரைத் திரும்பத்திரும்ப இட்டுவரக்கூடாது. ஒரு பயிர் சாகுபடியில் நல்ல பலன் தரும் காலகம் எரிகைக்காடி சாம்பர உப்பு அல்லது இவற்றிலெதேனும் இரண்டு வேறொரு பயிருக்கும் நல்லமேனிகாண உதவா. ஆகையால், நிலங்களில் பயிரிடுவதும் அவற்றிற்கு உரமிடுவதும் வெகு முன்யோசனையுடன் செய்யப்படவேண்டும். கடைகளில் விற்கும் உப்புரங்களைமட்டும் வாங்கி நிலங்களுக்குப் போட்டால் நிலங்கள் விருத்தியாகி விடமாட்டா. பிண்ணாக்குகளும் பசுந்தாள் உரமும் கால்நடை உரமும் அவசியம் இடவேண்டும்.

வானாவாரி நிலங்களையும் கவனிப்போம். மேலே சொன்னவை அவற்றிற்கும் ஒருவாறு பொருந்தும். ஈரிப்புப் போதிய அளவு இராததலால், உப்புரங்கள் அவற்றிற்குப் பயன்படா. சுற்றுவரப்புக்களும் சரியாகத் திடமாக இருக்கமாட்டாவாதலால், தரையிலுள்ள சத்தும் ஒவ்வொரு மழையிலும் அடித்துக்கொண்டு போகப்பட்டிருக்கும். ஆகையால், இப்படி நிலங்களுக்கு உரமிடுவதோடு நிலத்தின் சத்தை அரித்துக்கொண்டு போகாதபடி சுற்றுவரப்புக்களும் திடமாகப் போடவேண்டும்.

அனுபவ சாத்தியமான வேறு சில குறிப்புக்களும் கீழே தருகிறோம்:

க. கால்நடை உரத்தின் தன்மையையும் அளவையும் விருத்தி செய்யவேண்டும். கால்நடை மூத்திரத்தை ஒரு துளியேனும் விடாமலும் சாணத்தைக் கொஞ்சமும் விடாமலும் நிரம்பக் கரிமப் பொருள்களுடன் நிலத்தில் சேர்ப்பதால் இது சாத்தியமாகும்.

உ. நிலத்தின் கரிமச் சத்தை அதிகப்படுத்தவேண்டும். நன்செய்களிலும் தோட்டங்களிலும் சாதாரணமாகப் பயிரிடுவதை அடுத்துக் கால்நடை உரமும் இட்டுப் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்து அதனை மடக்கி நிலத்தோடு சேர்த்து உழுதிடுவதால் இது சாத்தியமாகும். நிலம் உலர்ந்துபோன காரணமாக அப்படி உழமுடியாவிட்டால் அதனை வெட்டிச் சேர்க்கை (Compost) உரமாக்கிப் பின் இடலாம். கரிமப் பொருள் மெதுவாக இருந்தாலும் சரி, கடினமாக இருந்தாலும் சரி, அதனைச் சாவகாசமான நேரத்தில் சேர்க்கை உரமாக ஆக்கி அதன் எதொரு பாகத்தையும் வீணாக்காமல் பின் நிலத்தோடு சேர்த்துவிடவேண்டும். கால்நடை உரத்தையும் பண்ணை உரத்தையும் புன்செய் நிலங்களுக்கும் அவற்றோடு உப்பு எலும்புத்தூள் முதலிய சத்தான உரங்களை நன்செய் நிலங்களுக்கும் தோட்ட நிலங்களுக்கும் உபயோகிக்க வேண்டும்.

ஈ. நிலத்தின் தரையை அரித்துவிடாதபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டும். புன்செய் நிலங்கள் சம்பந்தமாக இதனை அவசியமாகவும் முக்கியமாகவும் கவனித்துவர வேண்டும். சுற்று வரம்புகள் போட்டுக்கொள்வதாலும் சரிவுக்குக் குறுக்காக உழுவதாலும் சில தட்டுகளில் உயரமாக வளரக்கூடிய அல்லது படரக்கூடிய செடிகளைச் சாகுபடி செய்வதாலும் அதிகப்படியாகக் கட்டும் தண்ணீர் வழிந்து போகும்படியாக மட்டங்கள் கட்டிவிடுவதாலும் நிலத்தை அரித்துக்கொண்டு போகாதபடி காப்பாற்றிக் கொள்ள முடியும்.

ச. நிலத்திலுள்ள எரியச்சத்துக் குறைந்து போகாதபடி நம் நாட்டிலே சௌக்கியமாகக் கிடைக்கக்கூடிய எலும்புமா உரத்தை இட்டுவரவேண்டும். கால்நடை உரத்தின் மேல் எலும்புமாவையும் அதன் மேல் கால்நடை உரத்தையும் இப்படியாக 10 வண்டி கால்நடை உரத்திற்கு 56 இராத்தல் எலும்புமாச் சேரும்படி தூவி வருவதினால் இந்த உரத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். கால்நடை உரத்தைக் குழியில் போட்டிருந்தாலும் சரி, அதன்மேல் மழையும் வெய்யிலும் அடிக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம், எந்தச் சமுசாரியும் சாதாரணமாகச் செய்து

கொள்ளக் கூடியனவே. இதற்காகப் பணம் அல்லது யோசனை தேவையாக இருந்தால் விவசாயக் கூட்டுறவு அல்லது நிலவரி அதிகாரிகளின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம். விளைவு, நிலத்தின் செழுமையைப் பொறுத்ததாகவே யிருப்பதால், நிலத்திற்கு உரமிடத் தவறக்கூடாது. நம் நாட்டின் சனத்தொகை விருத்தியாகிக்கொண்டு வருவதால் உணவின் விளைவும் அதிகப்பட வேண்டும். நிலத்திற்கு நன்ருக உரமிடுவதினுல்தான், நாம் அதிக விளைவைக் காணமுடியும்.

The Madras Director of Agriculture, Press Note.

---

5. கூட்டுறவு:

கூட்டுறவுப் பதிவாளரின் ஆண்டறிக்கை, 1940-41.

(சாரம்)

கூட்டுறவு விசாரணைக் கழகம் செய்திருந்த சிபார்சுகளில் அதிகப் புரட்சியானவை யெதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கிராமச் சங்கங்களின் பொறுப்பு வரையறுக்கப் பட்டதாக இருக்கவேண்டுமென்று செய்திருந்த சிபார்சை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால், கிராமச் சங்கங்களின் பொறுப்பு, சாதாரணமாக வரையறுக்கப்படாமலே யிருந்துவரும். ஒவ்வொரு பாங்குப் பிரதேசத்திலுமிருக்கும் பிரதமச் சங்கங்களின் பாதுகாப்பு நிதியை (Reserve Fund) ஒன்று சேர்த்து அதற்குக் கூட்டுறவுப் பதிவாளர் அறவராக (Trustee) இருந்து, கேடான நிருவாகத்தினுலேனும் மற்றப்படிக்கேனும் கெட்டுப்போயிருக்கும் சங்கங்களுக்கு உதவ வேண்டுமென்று செய்திருந்த சிபார்சையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிச் செய்வது சரியாகவேலை செய்யும் சங்கங்களின் பணத்தை யெடுத்துத் தாறுமாருக நடந்து வரும் சங்கங்களுக்குக் கொடுப்பதாகவும் நிருவாகக் கேட்டை யாதரிப்பதாகவும் முடியுமென்று சொல்லிவிடப்பட்டது. கிராமச் சங்கங்கள் கொஞ்சம் பெரிய சங்கங்களாகவே இருக்கலாமென்றும் பல நோக்கச் சங்கங்களாக இருக்க வேண்டுமென்றும் அவை சாதாரணமாகத் தங்கத்தின் பேரிலும் நகைகளின் பேரிலும் கடன் கொடுக்கலாமென்றும் சிபார்சு செய்யப்பட்டிருந்ததையும் ஒப்புகொள்ளவில்லை. பிரதமச் சங்கம் பாக்கிதார்கள் பேரில் நடவடிக்கை நடத்தாதிருந்தால், அந்தச் சங்கத்திற்குக் கடன் கொடுத்திருக்கும் பாங்கே அவர்கள் பேரில் நடவடிக்கை நடத்த அதிகாரம் இருக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருந்ததையும் ஒப்புக்கொள்ளவில்லை. மத்திய பாங்குப் பலவகை பாங்கு வேலைகளும் வியாபாரமும் செய்யலாமென்றும், கடன் தரவேண்டிய சங்கங்கள் உலைக்கப்பட்டால் அந்தப் பாங்கின் அமைச்சரே அப்படிச் சங்கங்களின் முடிவு கட்டுபவராகவும் (Liquidator) இருக்கலாமென்றும் அதில் தனி நபர் பிரதிநிதிகளுக்கு இடம் இருக்க வேண்டியதில்லை யென்றும் ஆனுல், நிருவாகக் கழகம் விரும்பினுல் அவர்களுக் குதவியாகச் சிலரைச் சேர்த்துக்கொள்ளலா மென்றும் சிபார்சு செய்யப்பட்டிருந்தன வெல்லாம் பூராவுமாகவோ அரைகுறையாகவோ நிராகரிக்கப் பட்டிருக்கின்றன. மத்திய பாங்கு வேண்டுமென்ருல் மேற்பார்வைக் கழகங்களை வைத்துக்கொள்ளலா மென்றும் வேண்டாமென்ருல் அவற்றை யெடுத்துவிடலா மென்றும் சிபார்சு செய்திருந்ததையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆந்திர ஜில்லாக்களுக்கு ஒரு தலைமைப் பாங்கும் (Apex Bank) தமிழ்ச் ஜில்லாக்களுக்கு ஒரு தலைமைப் பாங்குமாக அமைக்கவேண்டுமென்று செய்யப்பட்டிருந்த சிபார்சையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தபசில் வகுப்பினருக்காகத் தனிச் சங்கங்கள் அமைக்க வேண்டியதில்லை யென்று சிபார்சு செய்திருந்ததைக் குடியேற்றவும் வீடுகள் கட்டவும் மற்றும் இவை போன்ற அவர்களுக்கெனத் தனியாகக்காரியங்கள் செய்யவும் அவசியமான பொழுது தனிச் சங்கங்கள் அமைக்கப்படலா மென்றும் அரசாங்கம் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறது. கூட்டுறவு மாகாணக் கழகம் இப்பொழுதிருக்கிறபடியில்லாமல் நான்கு மொழிக்கழகங்களின் சேர்க்கையாக (Union of Language Federations) இருக்கலாமென்று சிபார்சு செய்யப்பட்டிருந்ததையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை யதிகாரிகளைத் தனிப் பிரிவாக்கிவிட வேண்டுமென்று செய்திருந்த சிபார்சையும் ஏற்

றுக்கொள்ளவில்லை. சில அடைமான பாங்குகளுக்குத் துணைப்பதிவாளர்கள் (Deputy Registrars) வேண்டியதில்லையென்றும் கீழ்ப் பதிவாளர்கள் (Sub Registrars) ஐயாயிர ரூபாவரை கடன் சிபார்சு செய்யலாமென்றும் செய்திருந்த சிபார்சையும் ஏற்றுக்கொள்ளவில்லை. நிருவாகத்தை ஒதுக்கிவைக்கும் அதிகாரத்தைப் (Powers of Supersession) பதிவாளர் செலுத்து முன் கடன் கொடுத்துவரும் பாங்கின் சம்மதத்தையும் பெற்றே செய்ய வேண்டுமென்று செய்திருந்த சிபார்சையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலே விவரித்திருப்பனவற்றிலிருந்து, இயக்கத்தின் அமைப்பிலும் நிருவாக முறையிலும் பெரும் மாறுதல்களொன்றும் ஏற்படாதென்பதும் தெளிவாகும்.

சங்க சிப்பந்திக்குச் சொந்தக்காரர் அதன் நிருவாகக் கழகத்தில் அங்கத்தினராக இருக்கக் கூடாதென்று ஒரு விதி யேற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு சங்கத்தில் பாக்கி வைத்திருப்பவர் அந்தச் சங்கத்தின் நிருவாகத்தில் மட்டுமல்ல, எந்தச் சங்க நிருவாகத்திலும் இடம்பெறக் கூடாதென்றும் தடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சங்கத்தில் வேலை பார்த்து வருகிறவர் வேறொரு சங்க நிருவாகத்தில் இப்பொழுது இடம் பெற முடியாது. பட்டினப் பாங்கின் (Urban Bank) நிருவாகத்திலிருப்பவர் நேராகவேனும் மறைமுகமாகவேனும் அந்தச் சங்கம் விற்பதிலேனும் வாங்குவதிலேனும் மற்றும் ஒப்பந்தங்கள் செய்வதிலேனும் சம்பந்தமுடையவராக இருக்க முடியாது. கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தை அரசியல் காரியங்களுக்காகவேனும் கட்சிகள் சம்பந்தமாகவேனும் உபயோகப் படுத்தவும் முடியாது. சங்கங்கள் கணக்கெழுதாமலிருந்தால், ஒரு அதிகாரியைக்கொண்டு எழுதச் சொல்லி அதன் செலவையும் அந்தச் சங்கத்திலிருந்து வசூல் செய்யலாம். அதே மாதிரியாகப் பதிவாளரால் குறிப்பிடுகிற காலத்திற்குள் அனுப்ப வேண்டிய குறிப்புக்களை (Returns) அனுப்பத் தவறினால் அந்தக் குறிப்புக்களையும் ஒரு அதிகாரியைக்கொண்டு தயார் செய்யச் சொல்லி அதன் செலவையும் அந்தச் சங்கத்திலிருந்து வசூல் செய்யலாம். பாதுகாப்பு நிதி (Reserve Fund) பாங்குப் பங்குத் தொகைக்குச் சமமாகும் வரை பாங்குகளின் இலாபத்தில் மூன்றிலொரு பங்கிற்குக் குறையாத தொகையை அந்த நிதிக்குச் சேர்த்துவர வேண்டும். இப்படியாகக் கூட்டுறவியக்கத்திலிருந்த ஊழல்களைக் குறைப்பதற்கான விதிகளும் இந்த ஆண்டில் செய்யப் பட்டிருக்கின்றன.

பொது ஊழியர் (Public servants) கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்களுடைய மாதாந்தரச் சம்பளத்திலிருந்து தாங்கள் வாங்கிய கடனுக்குச் செல்ல வேண்டிய வகைக்குச் செலுத்தி வருவதாகவும் தங்கள் சங்க அமைச்சர் அல்லது தலைவர் அனுப்பும் பட்டியில் கண்டபடி சம்பளம் பட்டுவாடா செய்யும் அதிகாரியே தங்கள் சம்பளத்திலிருந்து பிடித்து அப்படிச் சேரும் தொகைகளைச் சங்கத்திற்கு நேரே யனுப்பி விடவும் சம்மதம் கொடுத்தாலன்றி அவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடாதென்றும் ஒரு விதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், அப்படிச் சங்கங்களில் இனித் தவணை கடந்த பாக்கிகள் ஏற்படக் காரணமிராது.

தனித்துணைப்பதிவாளர் இருக்கும் சில்லாக்களிலேயே கூட்டுறவு வேலை கூடியவரை திருப்திகரமாக நடந்து வருவதால் உதவிப் பதிவாளர்களே யிருந்து வரும் பெல்லாரி கர்நூல் நெல்லூர் மேலக்கோதாவரி சில்லாக்களுக்கும் மதுரைத் துணைப்பதிவாளரின் கீழிருக்கும் இராமநாதபுரம் சில்லாவிற்கும் தனித்துணைப் பதிவாளர் நியமிக்க வேண்டுமென்றும் கோயம்புத்தூர் துணைப்பதிவாளரின் கீழிருக்கும் நீலகிரி சில்லாவிற்கு ஒரு தனி உதவிப்பதிவாளரை நியமிக்க வேண்டுமென்றும் அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது. (இராமநாதபுரம் சில்லாவையும் மதுரை சில்லாவிலிருந்து பிரித்தாய்விட்டது. துணைப்பதிவாளரும் தனியாகச் சமீபத்தில் நியமிக்கப்படலாம். மற்றப்படி, இந்தச் சிபார்சு அமுலுக்கும் வந்துவிட்டது. ப-ர்.)

தணிக்கை (Auditing) தவிர்த்த மற்ற வேலைகளுக்காக ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு பார்வையாளராக (Inspectors) ஒன்பது சில்லாக்களில்நியமித்திருப்பதிலிருந்து அரசாங்கவேலை திருப்திகரமாக நடந்து வருகிறது. பாங்கு மேற்பார்வையாளர் (Supervisors) களுடைய அதிகார எல்லையும் அவற்றையனுசரித்திருக்குமென்றால், கூட்டுறவிலாகாவும் மத்திய பாங்கும் கிராமச் சங்கங்களைத் தீவிரமாக மேற்பார்த்து வரச் சாத்தியமாகும். தணிக்

கைக் குறைகளையும் உடனுக்குடன் திருத்தி விட முடியும். சங்கத்தின் நன்மைக்கான காரியங்களத்தனையும் சௌகரியங்களத்தனையும் செய்வதற்கும் சௌகரியமாக இருக்கும். இந்த அனுபவம் பின்னும் திருப்திகரமாக இருந்து வருமென்றால், அரசாங்கம் சிப்பந்திச் செலவு அதிகமாவதையும் பொருட்படுத்தாமல், மாகாணம் பூராவும் இந்த முறையைக் கையாளக்கூடும்.

சில ஜில்லாக்களைத்தவிர்த்து, பொதுவாகக் கிராமச் சங்கங்களை மத்திய பாங்குகள் மேற்பார்த்து வருவதும் சரியாக இல்லை; அனேக இடங்களில் மேற்பார்வை செய்து வருவதாகக் கூட வெளியே சொல்லுவதற்கில்லை. பழைய மேற்பார்வைக் கழகங்களைப் புதுப்பித்து, பலப்படுத்துவதற்கான முயற்சி செய்யப்பட வேண்டும். நிருவாக உறுப்பினர்கள் குறைந்தேயிருக்க வேண்டும். பாங்குக்குப் பாக்கி வைத்திருக்கும் சங்கப் பிரதிநிதி நிருவாக உறுப்பினராக இருப்பதுங் கூடாது. மேற்பார்வைக் கழகத்தின் கீழ் முப்பது சங்கங்களுக்குக் குறையாமலும் நாற்பது சங்கங்களுக்கு மேற்போகாமலுமிருக்க வேண்டும். மேற்பார்வையாளர்களை மத்திய பாங்கே நியமிப்பதாக இருந்தாலும் அவர்கள் மேற்பார்வைக் கழகத்தின் கீழாக இருந்து வேலை செய்துவர வேண்டும். அவர்களை வேலையிலிருந்து நீக்குவதென்றாலும் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென்றாலும் மத்திய பாங்கே செய்ய வேண்டும்; மற்றப்படி கொடுக்கவேண்டிய தண்டனைகளெல்லாம் மேற்பார்வைக் கழகமே செய்யலாம். மேற்பார்வைக் கழகத்தின் சம்மதமில்லாமல் சாதாரணமாக மத்திய பாங்குகள் மேற்பார்வையாளர்களை மாற்றவுங் கூடாது. மேற்பார்வையாளர்கள் மூன்றாண்டிற்கு மேல் ஒரே கழகத்தில் வேலை பார்க்கவுங் கூடாது. இப்படியாக மேற்பார்வைக் கழகங்கள் வேலை செய்து வந்தால், பின்னால் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள கழகங்களுக்கு மேலாகச் ஜில்லா சேர்க்கை சங்கமும் (District federation) அமைக்கலாம்.

கூட்டுறவுப் பிரதேசப் பள்ளிகளிலும் மத்தியப் பள்ளியிலும் அரசாங்கச் சிப்பந்திகளும் மற்றும் கூட்டுறவியக்கச் சிப்பந்திகளும் நிருவாக அதிகாரிகளும் பயிற்றப்பட்டு வருகின்றனர். மத்திய அரசாங்க உதவியைக் கொண்டு நம் மாகாணத்தின் பல பாகங்களிலும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சங்க நிருவாக அதிகாரிகளுக்கு மத்தியப் பள்ளியில் பயிற்சி கொடுத்து அவர்கள் மூலம் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டது. பிந்திய இரண்டு வகைப் பயிற்சியாலும் கூட்டுறவைப் பற்றிய அறிவு சரியாகப் பரவுவதாகச் சொல்லுவதற்கில்லை. ஆதலால், கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்கேற்ற இருபத்திநான்கு பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் நல்ல வேலை செய்துவந்திருக்கிறார்கள். சிக்கனம் காரணமாக அவர்களின் எண்ணிக்கை சமீபத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது. திரும்பவும் அந்த முறைப்படி பூரணமாக வேலை செய்வதாக இருந்தால் நல்ல பலன் கிடைக்கக் கூடும். (கடைசியாகச் சொல்லப்பட்டிருக்கும் முறைப்படி நடந்து வந்த பள்ளியொன்றைப் போய்ப் பார்த்தோம். அந்தச் சிற்றூரிலும் அதற்கு முன் நடந்த பிற இடங்களிலும் வகுப்புக்கள் நடந்து வந்த மாதிரியைப் பற்றியும் விசாரித்தோம். நாம் போயிருந்த அன்று ஒருவரே வந்திருந்தார். ஆதலால், அன்று வகுப்பு நடக்கவில்லை. அதற்கு முன் அங்கேயும் பிற இடங்களிலும் நடந்தனவும் அவ்வளவு திருப்திகரமாகச் சொல்லுவதற்கில்லை. வெளியுலகம் இருக்கிற மாதிரிதான் திரும்பச் சொன்னால் அதற்கும் மோசமாகக்கூடக் கூட்டுறவுலகம் இருக்கக் கூடும். மற்றப் போதனைகளை விரும்பி ஏற்றுக்கொள்ளுகிற மாதிரிதான் கூட்டுறவுப் போதனைகளையும் ஏற்றுக் கொள்ளக் கூடும். சங்கங்களின் வேலைப் போக்கிலேயே கூட்டுறவு அறிவை உறுப்பினர்களுக்கும் கற்பிக்கக்கூடுமென்றால், அவ்வளவில் செலவில்லாமலும் குறைந்த பயனேயாயினும் திட்டமான பயனைப் பார்க்கலாம். அதற்குமேல் எதிர்பார்ப்பது சாத்தியமான காரியமல்ல. ப-ர்.)

(பிரமாதமாகப் பேசுகிறவர்களாலும் தடைவேலைகளேனும் தீவிரமாகச்செய்ய முடிகிறதே யன்றி ஆக்கவேலைகள் செய்ய முடிகிறதில்லை. இந்த ஆண்டில் விவசாயக் கடன் சங்கங்கள் இரத்துச் செய்யப்பட்ட அளவேனும் புதுச்சங்கங்கள் அமைக்கப்படவில்லை. இதுவரை கிடைத்துவந்த மத்தியதரக் கடன்களும் இனிக் கிடைப்பதற்கில்லை. குறுகியகாலக் கடன்கள் அடுத்த மகசூலிலேயே மூன்று முதல் ஒன்பது மாதங்களுக்குள்ளாகச் செலுத்தப்படவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது,

சாதாரணமாக ஐந்தாண்டுகள் வரைக்கும் ஏக தேசம் ஏழாண்டுகள் வரைக்கும் மத்தியதரக் கடன்கள் கொடுக்கப்படலாமென்று கூட்டுறவு விசாரணைக் கழகம் சிபார்சு செய்திருந்தது. அரசாங்கக்கூட்டுறவுப் புத்தகமும் (Co-operative manual) மாடுகள் வாங்கவும் கிணறுகள் வெட்டிக்கட்டவும் அதிகக் கிரயம் பெறுமான விவசாயக் கருவிகள் வாங்கவும் இவை போன்றவற்றிற்கும் இரண்டு முதல் ஆறாண்டுகள் வரை கடன் தேவையிருக்குமென்று சொல்லுகிறது. பாதுகாப்புப் பாங்கும் (Reserve Bank) மாடுகள் வாங்கும் கடனைத் தீர்க்க இரண்டு மூன்று வருடங்கள் செல்லலாமென்றும் சொல்லுகிறது. என்றாலும், மாடுகள் வாங்குவதற்காக வாங்கும் கடனையும் கூடுமானால், அடுத்த மகசூலிலேயே வசூல் செய்து விடலாமென்றும் எப்படியும் இரண்டாண்டுகளுக்குள் ஆண்டிற்குப் பாதியாக வசூலித்து விடவேண்டுமென்றும் எக்காரணத்தையிட்டும் பிரதம சங்கங்கள் கொடுக்கும் கடன்கள் மூன்றாண்டுகளுக்கு மேற்போகக் கூடாதென்றும் வற்புறுத்துகிறது. பிரதமசங்கங்களில் கொடுக்கப்படும் கடன்கள் உறுப்பினர்கள் செலுத்தும் நிலவரிக்கு இத்தனை மடங்கென்றேனும், நிலவரி நிர்ணய அறிக்கைகளிலிருந்தும் நிலவரி விவசாய இலாகா அதிகாரிகளிடமிருந்தும் சாகுபடிக்கு ஆகக்கூடிய செலவுகளையும் ஒவ்வொரு மகசூலிலும் மிஞ்சக்கூடியதையும் தெரிந்துகொண்டு அந்த அளவுக்குட்பட்டேனும், கூடியவரை குறைவாகவே கடன் அனுமதிக்க வேண்டுமென்றும் அப்படி அனுமதிக்கும் கடனையும் அப்போதைக்கப்போதைய தேவைக்குத் தக்கதாகக் கொஞ்சம் கொஞ்சமாகவே கொடுத்து வரவேண்டுமென்றும் சொல்லுகிறது. விவசாயிகள் கொடுக்கல் வாங்கல்காரர்களிடம் முன்போல் கடன் வாங்குவதற்கும் சௌகரியமில்லை. அவர்களுக்கு மத்தியதரக் கடன்கள் இப்பொழுதும் அவசியமில்லாமல் போய்விடவில்லை. அதனை அரசாங்கமும் பாதுகாப்புப் பாங்கும் உணராமலுமிருக்கவில்லை. நம் மாகாணமெங்கும் ஒரே படித்தாகச் செழிப்பாக இல்லை. ஆண்டுக்கு மூன்று மகசூலாகத் தொடர்ந்தைந்தாண்டுகளில் பத்துப் பன்னிரண்டு மகசூல்கள் விளையவும் மற்றவை விதைப்பதற்கில்லாமல் அல்லது தீய்ந்து போகவுமாக இருக்கும் பிரதேசங்களும் இருக்கின்றன. ஆண்டுக்கொரு மகசூலாக ஐந்தாண்டுகளிலும் இரண்டொரு மகசூல்களே விளையக் கூடிய பிரதேசங்களும் இருக்கின்றன. இப்படியாகப் பல் வேறு திறப்பட்ட பிரதேசங்களிருக்க, எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியான திட்டம் செய்வதும் 'ஏகப்பசெட்டி லெக்க, ஏகலெக்க' என்று சொல்லுவதுபோல் தானிருக்கிறது. பிரதம சங்கங்கள் மூன்றாண்டுகளுக்குமேல் கடன் கொடுக்கக் கூடாதெனவும் பிரதம சங்கங்கள்பெறும் மொத்தக் கடன் தொகையில் சிறிதளவே மூன்று முதல் ஒன்பது மாதங்களுக்குப் பின் திரும்பச் செலுத்தக்கூடிய கடனாக இருக்கலாமென்றும் பாதுகாப்புப் பாங்கு சொல்லுகிறபடியே செய்திட வேண்டுமென்று செய்வதெல்லாம் விவசாயிகளின் நன்மை கருதிச்செய்யும் காரியங்களாக மாட்டா. அரசாங்கம் பார்த்துப் பணம்திரட்டுவதென்றால், போதிய மத்தியதரக் கடன்கள் கொடுக்கக் கூடியதாகவும் வேண்டும் நிதி திரட்டிவிடலாம். கடன்களைக் கட்டுப்படுத்தி வர வேண்டிய அவசியத்தை எவரும் மறுக்கமாட்டார். அதற்கான வேலைகளைச் செய்து வேண்டும் தகவல்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேகரித்தும் தராமல் (நிலவரி விவசாய இலாக்காக்களிடமிருந்தும் நிலவரி நிர்ணய அறிக்கைகளிலிருந்தும் வேண்டும் தகவல்களைச் சங்கங்கள் தாங்களாகத் தெரிந்து கொள்ளக் கூடியதில்லை. வேலைகளை அதிகப்படுத்த வேண்டிய துறைகளில் அதற்கான முயற்சிகளும் செய்யாமல் தானாக நடந்துகொண்டிருக்கிற வேலையையும் இறுகப்பிடித்துத் திணற வைத்துவிட்டால், தாவரசொத்துக்களின் பேரில் கடன்கள் கொடுப்பதும் நின்றுபோய்க் கூட்டுறவுணர்ச்சி வேகமாகப் பரவி விடுமென்று நினைப்பதும் நமக்கு விசித்திரமாகவே தோன்றுகிறது. கூட்டுறவுப் பதிவாளர் சொல்லுகிறமாதிரி கூட்டுறவுணர்ச்சி பரவினாலும், அது காட்டுத் தீபோல் பரவுகிற பொழுதே உள்ள உணர்ச்சியையும் அழித்துக் கொண்டுபோய் விடுமென்று அஞ்சுகிறோம். ப—ர்)

(கூட்டுற விலாகாவிற்கும் பொதுசனங்களுக்கும் இருந்துவரும் சம்பந்தத்தின் தன்மையைப்பற்றி இவ்வாண்டறிக்கையில் ஒன்றும் சொல்லப்படாத காரணம் தெரியவில்லை. ப—ர்.)

---

6. கல்வி:

குழந்தைகளின் மனக்கிளர்ச்சிச் சங்கடங்களும் (Emotional Difficulties) அவற்றிற்குப் பரிகாரமும்

M. S. Srinivasa Sarma

(சாரம்)

முன்னுரை: குழந்தை, எல்லாம் படித்தாக வேண்டும். அதற்கு அமைதியான குணமும் இனிமையான ஒழுக்கமும் அதன் முடுக்கான உள்ளத்திலிருந்தே பிறக்க வேண்டும். ஆதலால், குழந்தையின் கல்வி அதனுடைய புத்தித் திறமையை வெளிப்படுத்துவதாக இருந்தால் மட்டும் போதாது; அதனிலும் சிறப்பாகத் தன்னை அடக்கப் பழக்குவதாகவும் இருக்க வேண்டும். குழந்தைப் பருவத்தில் மூளையும் மனதும் எவையும் மிகவும் அழுத்தமாகப் பதியக் கூடியனவாக இருக்கின்றன. ஆகையால், வீட்டிலும் பள்ளியிலும் வெகு கவனமாகக் கற்பித்துவர வேண்டியதிருக்கிறது. குழந்தைப் பருவத்தின் சுற்றுப்புற ஆட்சி, பின்னும் அழியாதபடி பிற்கால வாழ்க்கை முழுவதிலுமே உறைந்து நிற்கிறது. நம்முடைய பயங்கள் பலவற்றிற்கும், நாம் பிறரோடிணங்கி வேலை செய்யவும் நம் குடும்பத்துடன் மகிழ்ந்து வாழவும் முடியாதபடி நேரும் சங்கடங்களுக்கும் காரணம் நம் குழந்தைப் பருவத்தின் குறைவேயாகும். சுற்றுப்புறமென்பதில் நம்மைச் சுற்றிலுமிருந்து நம்மைத் தம் வசப்படுத்துவன வெல்லாம்—நம்முடைய வீடும் பள்ளியும், நம்முடைய உணவும் கல்வியும், நம்முடைய வேலையும் நண்பர்களும், நாம் அக்கறை கொள்ளும் எல்லாமும்—அடங்கும். கோபமும் பயமும் நிறைந்த குழந்தைகளின் பள்ளி வேலையும் திருப்திகரமாக இருப்பதில்லை.

மனோதத்துவ ஞானம், நாம் களிப்புடனும் வெற்றிகரமாகவும் வாழ்வதற்கு நம் மனக்கிளர்ச்சிகள் உதவக் கூடுமென்பதனையே நினைவுறுத்துகிறது. ஆகையால், ஆசிரியரின் முதற்கடமை, குழந்தையுடன் தான் களிப்பான தோழமைகொண்டாடி, குழந்தைக்கும் சுற்றுப்புறத்துக்கும் இணக்கத்தை அதிகப்படுத்தி வருவதேயாகும். சங்கங்களும் சந்தர்ப்பங்களும் நிறைந்த சுற்றுப்புறத்தில் பூரணமாக வாழ்வதென்பது எவருக்கும் சிரமமான காரியமேயாகும். ஒரே வீட்டில் ஆதரவுடன் வாழும் குழந்தைகளுக்கும் அனாதரவு செய்யப்படும் குழந்தைகளுக்கும் சுற்றுப்புறம் வெவ்வேறாகும்; ஆதலால், இணக்கச் சிரமமும் வெவ்வேறாகும். பள்ளிப்பருவத்தில் சரிப்படுத்தப் படாதவர்களே பிற்கால வாழ்க்கையிலும் சங்கடங்களுக்காளாகிறார்கள். தங்களைப்பற்றியும் தங்கள் வேலையைப் பற்றியும் திருப்தி அடையாதவர்களும் தங்கள் சகபாடிகளுடன் பிணங்கித் திரிகிறவர்களுமே, பின்னால் உலகவாழ்க்கைக்கும் பொருத்தமில்லாதவர்களாகிறார்கள். அவர்கள் சமூகத்துக்கொரு அபாயமாகவும் தங்களுக்கும் பிறருக்கும் முடிவில்லாத துக்ககாரணர்களுமாகிறார்கள். ஆகையினால், பெற்றோர்களும் ஆசிரியர்களும் சுற்றுப்புறத்தைக் குழந்தைகளுக்குக் கூடியவரை இனியதாக வைத்திருக்க வேண்டும். அவர்களுடைய இயற்கை உணர்ச்சிக்கும் சுற்றுப்புறத்தின் தேவைகளுக்கும் போராட்டம் நிகழக்கூடிய சந்தர்ப்பங்களைக் குறைத்தும் வரவேண்டும். இதனால், குழந்தையை அதன் இயற்கை உணர்ச்சிப் போக்கின்படிக்கே பெற்றோர்களும் ஆசிரியர்களும் விட்டுவிட வேண்டுமென்பதுமில்லை.

மனக்கிளர்ச்சி நேராகவும் எளிதாகவும் ஒழுங்குபடும் வழி சரியான முடிவும் அதனை விடாது செய்து முடித்தலுமாகும். பதற்றத்தை வளர்க்கக்கூடிய சம்பவம் நிகழும்பொழுது, சாந்தத்தை விடாது காத்தலே அத்தகைய மனக்கிளர்ச்சி பிறக்கும் நிலைமையை அடக்குவதற்குதவும். உற்சாகமில்லாத தன்மை உற்சாக மூட்டப்படுவதாலும், பகைமை நட்பை வளர்ப்பதாலும் மறையும்.

பரிகாரங்கள்:- முதலாவதாக, அதன் திறமைக்குத் தகுந்ததான அதற்குப் பிடித்ததான

வேலையையே குழந்தையைச் செய்யும்படி சொல்ல வேண்டும்; அந்த வேலை, செய்வதற் கெளிதாகவும் இனிமை பயப்பதாகவும் இருக்க வேண்டும்; அதற்குப் பயன்படக்கூடியதாக வும் நான் செய்தேன் என்று பெருமை கொள் ளும்படி நன்ருகச் செய்யக்கூடியதாகவுமிருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மற்றவர்கள் அதன் வேலைத் திறத்தைப் போற்ற வேண்டும். குழந் தையின் சகபாடிகளும் அதன் தனித் திற மையை அங்கீகரித்து அதற்கு மரியாதையும் செய்யவேண்டும். பிறர் தன்னை மதிக்காத வரை, அது தன்னைத்தானே மதிக்க முடியாது.

வளருவதற்கும் விருத்தியாவதற்கும் தன் அறிவை உணருவதற்கும் போதுமான சௌ கரியம் தாராளமாகவும் முழு அளவிற்கும் அதற்குத் தரப்பட வேண்டும். போதுமான வேலை செய்து வருவதே ஒருவனை நிதான புத்தியோடிருக்கச் செய்யும். தொந்தரவுகளில் பெரிதும் பாதிக்கப்படும் ஒருவன் தனக்கு அக்கறையான காரியங்களிலீடுபடுவதே அவ னுக்கு விரும்பத்தக்க மாற்ருக இருக்கும். தன் வேலையில் ஆழ்ந்து விடுவதால், அந்த நேரம் பூராவும் அவன் தன் தொந்தரவுகளையும் மறந் திருக்கக்கூடும். ஒரு சிலர் அல்லது பலரோடு சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்களும் சங்கீத மும் நாடகங்களும் மற்றும் வேடிக்கை விநோ தங்களும் கலக்கமுற்றிருக்கும் நிலைமையையும் வெகு ஆச்சரியமாகத் தெளிவிக்கும். அவற் றின் மூலமாக நம்முடைய சத்தியும் கட்டி லிருந்து விடுபட்டுக் காரியம் பலிதமாவதற்கு முயற்சிக்கும். சாமான்கள் செய்தல் எழுது தல் வரைதல் தன் தன் விருப்பிற்குகந்த சில வற்றைச் செய்தல், இவை யெல்லாம் திருப்தி கரமான வாழ்க்கைக்குத் துணை செய்வனவாக எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். களிப்பு ஒன்றைச் செய்வதின் முடிவில்தான் தோன்று மென்று சொல்லுவதற்கில்லை. தொந்தரவி லிருந்து தொந்தரவற்ற நிலைமைக்குச் செல்லு வதற்கிடையிலும் தன்னை மதியாது புறக் கணிக்கப்பட்ட நிலைமையிலிருந்து தன்னைப் புகழுவதற்கான நிலைமைக்கு வருவதற்கிடை யிலுமே தோன்றி வளர்ந்து வருகிறது.

குழந்தைகளின் கல்வி சம்பந்தமாகப்பெற் ருேரும் ஆசிரியரும் செய்யும் பெரும் பிச கென்ன வென்ருல், வழி தவறிப்போகும் குழந்தையை ஒரு நாளும் உருப்படாதென்று பழித்துவிடுவதேயாகும். ஒரு குழந்தை பிற் கால வாழ்க்கையில் நம்பிக்கை அற்றுப்போ கும்பொழுது அது அதனை உண்மை நிலையி னின்றும் விலகிப்போகச் செய்கிறது. அதற்கு மாற்ருக, பிரயோசனமில்லாததும் பாதகமா னதுமான வாழ்க்கை முறைகளில் பிரவேசிக்க வும் தூண்டுகிறது. ஆகையால், ஆசிரியரின் வெகு முக்கியமான வேலை பள்ளியில் படிக்கும் எந்தக் குழந்தையையும் அந்தரியப்படுத்தா திருப்பதேயாகும்.

பயத்தைத் தவிர்த்தல் :—பயத்தைப் பெரி தும் தவிர்க்கக்கூடியது உடல் முயற்சியேயா கும். நாம் ஆரம்பத்திலிருந்தே குழந்தைகளை எதொரு காரியத்தையும் கவனமாகச் செய்யும் படிக்கும் அதில் எதுவும் தவறினுலும் அதற் காக உளைந்துகொண்டிராத படிக்கும் பயிற்று வித்தோமென்ருல், அவர்கள் கவனமாகச் செய்து வரவும் பழகுவார்கள்; பயத்தையும் தவிர்ப்பார்கள். பயம் ஊக்கத்தையே உறிஞ்சி விடுமாதலால், அந்த ஒரு காரணத்திற்கேயுங் கூடக் குழந்தைகளைப் பயமில்லாமல் வளரும் படி செய்யவேண்டும். ஆனல், அப்படி வளரச் செய்யவேண்டு மென்பதற்கு வேறு பல கார ணங்களுமிருக்கின்றன. பயமில்லை யென்கிற பொழுது தன்னம்பிக்கை இருக்கவே செய் யும். பிறரைப் பார்த்தும் தானகவும் புது மாதிரி வேலைகளைச் செய்யத் துணிவும் ஏற்ப டும். அதனல், எதிர்பாராத நல்ல பலன்களும் சித்திக்கும். இத்தகைய சிறந்த பலன்கள் சாதாரணப் பயிற்சியாக இல்லாமல் தாங்களா கக் கோரிக்கொண்ட பயிற்சி பெற்றுத் தாங்க ளாகச் செய்கிற வேலையிலேயே வெகுவாகவும் கிடைக்கின்றன. அப்படிக் கிடைப்பதும், குழந் தைக்கு அந்தக் காரியத்தில் அக்கறையிருக் கிற தென்பதனல் மட்டுமல்ல; பயமில்லாத குழந்தைக்குப் பிறரைப் பார்த்தும் தானகவும் ஒன்றைச் செய்வதற்கு அதிக ஊக்கம் இருப் பதினுலேயாம்.

தன்னைத் தான் தாழ்த்திக்கொள்வது இயற்கையாகவுள்ள குறைவுணர்ச்சியே யென் ருலும், அதுவும் நிலைமையை உயர்த்திக்கொள் ளுவதற்கான முயற்சிகளுக்கு இடந்தரும். குழந்தை உலகத்தில் பிறந்ததும் அது பிறரு டைய ஆதாரவையே பூராவாகவும் சார்ந்திருக் கிறது. தன்னைத் தூக்கி யெடுத்து உணவூட்டிச்

சிரிக்கச் செய்து சௌகரியப்படுத்தியதுமே அதன் ஆதி ஞாபகத்திலிருக்கும். அதன் ஆரம்ப வாழ்க்கையில் தன்னால் ஒன்றும் செய்யமுடியாதிருந்ததே அதன் பலத்த மனக் கிளர்ச்சியனுபவமாகும். வயதாக ஆக உண்மையிற் பழகியும் பிறருக்குப் பிரியமாக நடந்தும் பிறருடைய ஆதரவைப் பெற முயற்சிக்கிறது. ஏதாமொரு காரணத்தால், சமூக வழிகளில் அதற்கு அன்பும் ஆதரவும் கிடைக்காதுபோமென்றால், சமூகத்திற்கு முரண்பட்ட வழிகளில் முயற்சித்தேனும், சமூகம் தன்னைப் பொருட்படுத்தச் செய்ய வேண்டுமென நினைக்கிறது. ஆகையால், எந்தச் சிறு குழந்தையும் தன்னைச் சிறியதாகவும் அற்பமாகவும் ஆதரவற்றதாகவும் கருதிக்கொள்ளுவதற்கு இடந்தராமல், நம் அனுதாபத்துடன் குடும்ப வாழ்க்கையிலும் பள்ளிவாழ்க்கையிலும் அதற்கொரு மரியாதையோடும் மகிழ்ச்சியோடும் கூடிய முக்கியத்துவம் இருக்கிறதென்றே நம்பியிருக்கவும் செய்யவேண்டும். குழந்தைக்காகப் பாடுபடுகிற தாய்மாரும் ஆசிரியரும் குழந்தை தங்களைச் சார்ந்திருக்கிற உணர்ச்சி ஒன்றையே வளர்க்கிறார்கள். ஆனால், அதன் சுகமும் மகிழ்ச்சியும் ஒரு சத்தியோடு வளரும் அதன் உணர்ச்சியிலேயே இருக்கிறது.

களிப்பான வாழ்க்கை:- மனோசுகம் தன் தன் பிரியம்போல, தன் தன் ஊக்கத்தைச் செலவழிப்பதிலும் தன்னைப் போல அக்கறையும் மகிழ்ச்சியுமுள்ளவர்களோடு ஒத்துழைக்கும் திறமையிலுமே இருக்கிறது. அதாவது, அது உண்மையான கூட்ட வாழ்க்கையிலேயே அமைந்திருக்கிறது. கூட்டத்தில் சமூகத்தில் தன்னை ஒன்றாகக் கருதும் உண்மை உணர்ச்சியின் சக்தி, பெரிய பொதுக்காரிய நன்மைக்காகத் தன்னுடைய சொந்த நன்மையை விட்டுவிடும் தியாகமாகவும் பொதுக்காரிய நன்மைக்காகப் பாடுபடும் உறுதியாகவும் விருத்தியாகி வரும். மனிதனுடைய கூட்ட வாழ்க்கை அவனுக்கு இயற்கையானது. அவன் பிறரோடு கூடிப் பழகுவதால், அவனுடைய சக்தி அதிகரிக்கவும் செய்கிறது.

மனோசுகமெல்லாம் பிணங்கச் செய்யக்கூடிய காரியங்களைத் தவிர்ப்பதைப் பொறுத்ததாகவே யிருக்கிறது. சுகமான உடம்பில் தான் சுகமான மனதும் இருக்கும். சுகமான பழக்கங்களையும் போக்குகளையும் சுகத்தை வளர்க்கும் காரியங்களையும் விருத்திசெய்வதிலேயே மனிதத் தரமும் அமையும். சன்மார்க்கம் இன்னதெனத் தெரிந்து அதனைக் கைப்பிடித்து வருவதோடு தான் ஒரு உறுப்பினனாக இருக்கும் சமூகத்தோடு இணங்கிவாழும் திறமையுடன் தன்னுடைய வேலையைச் சுற்றுப் புறத்தோடிணங்கித் திறமையாகச் செய்து முடிக்கக் கூடியவனாகவும் இருப்பவனையே நிதானமான மனிதனென நாம் சொல்லலாம்.

Hindu.

---

7. குடிசைத்தொழில்: கைத்தொழில்

நம் மாகாணக் குடிசைத் தொழில்கள்

(ஆண்டறிக்கையின் சாரம்)

நம் நாடு போன்ற பெரிய விவசாய நாடு விருத்தியாக வேண்டுமென்றால், பெரிய ஆலைத் தொழில்களும் மத்தியதரத் தொழில்களும் குடிசைத் தொழில்களும் எல்லாக் கைத்தொழில்களுமே அவசியம் பெருகவேண்டும். பெரிய ஆலைத் தொழில்களினால், மத்தியதரத் தொழில்களும் குடிசைத் தொழில்களுமே விருத்தி யடையக்கூடும். நம் நாட்டுக் கிராமக் கைத்தொழில்களை இலாபகரமாகப் பெருக்கிக் கொள்ளாதவரை, விவசாய வேலைகளில்லாத காலமெல்லாம் வீணாகவே கழியவும் நேரிடும். விவசாயத்தில் வந்து குவிகிற கூட்டத்தைக் குறைக்கவும் முடியாது போய்விடும். ஆகையால், கிராமக் கைத்தொழில்களை ஆதரிப்பதும் அவற்றை விருத்தி செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

செங்கற்பட்டு இராமநாதபுரம் கோயம்புத்தூர் நெல்லூர், குண்டூர், மேலக்கோதாவரி, அனந்தப்பூர், கடப்பை ஜில்லாக் கலக்டர்கள் தங்கள் தங்கள் ஜில்லாக்களில் விருத்தி செய்யக்கூடிய கைத்தொழில்களைப் பற்றி எழுதியிருந்த அறிக்கைகள் இந்த அறிக்கை யாண்டில் கவனிக்கப்பட்டன. செங்கற்பட்டு ஜில்லாவில் சட்டிபானை வனைதலை விருத்தி செய்வதற்குப் போதிய சௌகரிய மிருக்கிறது. திருந்திய முறைப்படி சட்டி பானைகளைச் சுடுவதற்கும் அவற்றிற்குப் பளபளப்புக் கொடுப்பதற்கும் கிராமங்கள் தோறும் போய்ச் செய்து காட்டி வருவதற்கும் அந்தப் பிரதேசத்திலேயே கிடைக்கும் மண்ணைப் பரிட்சித்துப் புது மாதிரிப் பாண்டங்கள் செய்வதற்குபயோகிக்கவும் ஒரு திட்டம் தயாரித்து அரசாங்கத்துக்கனுப்பப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவில் பனை வெல்லம் செய்தலையும் கயிறு திரித்தலையும் விருத்தி செய்யலாமென்று தெரியவந்தது. புது மாதிரிப் பனைவெல்லம் செய்வதை அரசாங்கச் செலவில் மாகாணம் பூராவும் செய்து காட்டிக்கொண்டிருக்க முடியாதென்றும் அக்கறையுள்ளவர்கள் அதன் செலவைப் பொறுத்துக் கொள்ளுவதென்றால் அங்கங்கேபோய்ச் செய்து காட்டி வரலாமென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கயிறு திரிக்கிறதைப்பற்றி, நாரைச் சுத்தம்பண்ணிக் கயிறுகள் திரிக்கவும், பாய்கள் நெய்யவும் பெரிய பட்டினம் என்ற ஊரில் ஆறு மாதம் செய்து காட்டுவதென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லா கலக்டரவர்கள் எழுதியிருந்த அறிக்கை சம்பந்தமாக, அக்கறையுள்ளவர்கள் தேனீ வளர்ப்பதைச் சொல்லி வைப்பதற்கும் செய்து காட்டுவதற்கும் கைத்தொழிற் பள்ளிகளுக்கு உதவி வருவது போல உதவக்கூடுமென்றும் கயிறு திரிக்கிறவர்கள் இப்பொழுதுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து தங்களுக்குவேண்டிய பண உதவியைப் பெற்றுக் கொள்ளலாமென்றும் தங்கள் கயிறுகளைப் பொள்ளாச்சி விற்பனைச் சங்கம்மூலமாக விற்றுக் கொள்ளலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. காட்டிலாகாவையும் கொள்ளேகால் பட்டுப் பூச்சி வளர்ப்பவர்களின் சௌகரியத்திற்காகப் பாதுகாப்புக் காட்டில் (Reserve Forest) குமுறி (Kumri) முறைப்படி முசுக்கொட்டைச் செடிகள் பயிரிட அனுமதிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பனைவெல்லம் காய்ச்சுவது சம்பந்தமாக அக்கறையுள்ளவர்கள், அதற்கான செலவை ஏற்றுக்கொண்டால் செய்து காட்டலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை தோல் தொழிற் பள்ளிக்கு மாணவர்களெடுக்கும் பொழுது சக்கிலியர்களுடைய தேவைகளையும் கவனித்துக்கொள்ளும்படி சொல்லப்பட்டிருக்கிறது. கடப்பை கலக்டர் அறிக்கையின் பேரில், அந்தச் ஜில்லா உதவி விவசாயத் தலைவருக்குச் சமுசாரிகள் கோரைப் புல் வளர்ப்பதை ஆதரிக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. அனந்தப்பூர் கலக்டர் அறிக்கையின் பேரில் சில வாலிபர்களைச் சாயம் செய்யவும் சாயமேற்றவும் கையால் காகிதம் செய்யவும் கைத்தொழிற் பள்ளிகளில் படிப்பதற்கனுப்பலாமென்றும் தச்சு வேலை படிக்க வைப்பது சம்பந்தமாக ஏதேனும் கைத்தொழிற் பள்ளி ஆரம்பிக்கக்கூடுமென்றால் அரசாங்கம் அதற்கு உதவலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் ஜில்லாவில் வளையல் தொழில் இருக்கும் நிலைமையும் கவனிக்கப்பட்டது.

உப்புத்தாள் செய்வதற்காக, ஒரு எந்திரம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் செய்யப்பட்ட தாள்களும் திருப்திகரமாக இருந்தன.

சென்னை கலைக்கைத்தொழிற் சாலையில் (School of arts and crafts) மட்பாண்ட வேலை முதற்தொகுதி மாணவர்களின் படிப்பு முடிந்துவிட்டது. இன்னும் மூன்றாண்டுகளுக்கு அந்த வகுப்பை நடத்தவும் பளிங்கு போல் ஆக்குகிற வேலையை (enamelling) இன்னும் இரண்டாண்டுகள் கற்றுக்கொடுக்கவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. படங்களுக்குச் சட்டங்கள் போடுவதற்கு வேண்டிய மரம் கள்ளிக்கோட்டையில் சௌகரியமாகக் கிடைக்கக்கூடுமாதலால், அந்த வேலைப் படிப்பைச் சென்னைப் பள்ளியிலிருந்து மாற்றிக் கள்ளிக்கோட்டை அரசாங்கக் கைத்தொழிற் பள்ளியில் சொல்லிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Report of the Department of Industries and Commerce, Madras, 1940-41.

அ. குழந்தைகளின் பொய்களும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளும்

Lalita Kumarappa.

(சாரம்)

குழந்தைகளின் பொய்யை இலேசாக நினைத்துச் சும்மாயிருந்திடக்கூடாது; ஆரம்பத்திலேயே அவற்றைத் தவிர்க்காதிருந்தால், பின் தாறுமாறாகவும் முடியலாம். குழந்தைகளை வயது வந்தவர்கள் மாதிரியாக உண்மை சொல்லிவரவேண்டுமென்று கண்டிப்புச் செய்தலுங்கூடாது. அவர்களுக்குத் தெரிந்த அளவே சொற்பம். இது சரி இது பிசகெனத் தெரிந்துகொள்ளவும் அவர்களுக்குச் சத்தி போதாது; உண்மை கற்பனை என்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ளமுடியாது. அவர்கள் போக்கிலேயே உண்மை சொல்லவும் உண்மையாக நடந்து வரவும் கற்பித்து வரவேண்டும். அனுபவத்தின் பேரிலேயே, உண்மை சொல்லுவதின் நோக்கத்தை அவர்கள் உணர முடியும். அப்படித் தாமாக உணரும்பொழுது தான், குழந்தைகள் உண்மையே பேசக்கூடும்.

குழந்தைகள் ஏன் பொய் சொல்லுகின்றன? விகற்பமான நினைப்பொன்றுமில்லாமலே சௌகரியத்திற்காகப் பொய் சொல்லக் கூடும். அநேகமாகப் பாதிப் பொய்களுக்கு மேல் தண்டனைக்காகப் பயந்தே சொல்லப்படுகின்றன. பிறர் சிரிக்கக்கூடும், கேலிசெய்யக் கூடும், பிசகென்று சொல்லக்கூடும், தம்மோடு பேசவேண்டாமென்று சொல்லக்கூடும் என்று நினைத்தும் பொய் சொல்லுகின்றன. நீ இதனைச் செய்தாயா? இல்லையா? வென்று எந்தக் குழந்தையையும் கோபமாக நாம் கேட்கும்பொழுது இல்லையென்றே சொல்லும். அப்படிச் சொல்லுவதை நாம் அத்துணை குற்றமாகச் சொல்லமுடியாது; நாம் அப்படிக் கேட்டதைத்தான் குற்றமாகக் கொள்ளவேண்டும். ஒரு குழந்தை ஒரு பிசகைச் செய்திருப்பது நமக்குத் திட்டமாகத் தெரிந்திருக்கும் பொழுது அதனை மறுக்கும்படியாகவும் கேட்கக் கூடாது. ஒப்புக்கொள்ளும்படிக்கும் வற்புறுத்தக்கூடாது. இப்படிச் செய்தாயே, அதனால்தான் இப்படி ஆயிற்றென்றேனும், இப்பொழுது நான் பார்த்து அதனைத் தவிர்த்திருக்காவிட்டால் இப்படியாயிருக்குமே யென்றேனும், அதற்குப் படும்படியாகச் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால் அந்தக் குழந்தை நம்மையும் மதிக்கும்; தான் செய்தது பிசகென்பதையும் உள்ளூர உணரும்; அந்த மாதிரி திரும்பப் பேசவும் செய்யாது.

ஒரு குழந்தை இன்னொரு குழந்தையின் பம்பரத்தைத் திருடிக்கொண்டு வந்திருக்கலாம். என்றாலும், அந்தக் குழந்தையைப் பம்பரம் ஏதென்று நாம் கேட்கும்பொழுது, எந்தக் குழந்தையினிடமிருந்து திருடிக்கொண்டு வந்ததோ, அந்தக் குழந்தை கொடுத்ததாகவே சொல்லும். திருடிக்கொண்டு வந்ததுமில்லாமல் பொய்யும் சொல்லுகிறதேயென்று கண்டிப்பதால் அந்தக் குழந்தை திருந்திவிட மாட்டாது. அதற்குப் பதிலாக “பார்த்தாயா, அந்தக் குழந்தை எவ்வளவு நல்ல குழந்தையாக இருக்கிறது, நீயும் நல்ல குழந்தையாக அந்தக் குழந்தைக்கு உதவவேண்டாமா? உன்னுடைய மோட்டாரை அந்தக் குழந்தைக்குக் கொடுத்துவிடு” என்று சொல்லி அது விளையாடிக் கொண்டிருக்கும் மோட்டாரை எடுத்துக் கொடுத்தனுப்பினால், அந்தக் குழந்தை அதனைத் தடுத்து ஒன்றும் சொல்லவும் மாட்டாது. அதன்பின் அந்த மாதிரி அடுத்தவர்கள் பண்டங்களை எடுத்து வரவு மாட்டாது. எக்காரணத்தை யிட்டும் குழந்தை பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறபொழுது சொல்லுகிற பொய்யைப் பிரமாதப்படுத்தித் தண்டிக்கக்கூடாது. அப்படியே விட்டுவிட்டால், அப்படித் தான் பொய் சொன்னதைக் கூடச்

சீக்கிரம் மறந்துவிடும். பிறரோடு போட்டியாக விளையாடும்பொழுது தான் வெற்றி பெறு திருக்கத் தானே பெற்றதாகக்கூடப் பொய் சொல்லும். அது ஒரு பெருமையாகச் சொல்லும் பொய்யாகுமேயன்றி (the lie of vanity) பிசகெனத் தெரிந்து சொல்லும் பொய்யாகாது. அப்படிப் பெருமைக்காகச் சொல்லும் பொய்யும் விளையாட்டாகச் சொல்லுகிற பொய்யும் (the playful lie) இன்னதுதான் சொல்லுகிறேமென்று தெரியாமல் சொல்லுகிற பொய்யும் (the lie of confusion)கொஞ்சம் விவரம் தெரியவும் தானுகவே நின்று போகும். தோட்டத்தில் பூத்திருந்ததைப் பார்த்துவந்த குழந்தை அதனை மிகைப் படுத்திப் புளுகினுல், அதற்காக அதனைக் கேலி செய்யாது கொஞ்ச நேரம் கழித்துத் தோட்டத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் அந்தப் பூவைக் காட்டி இந்தப் பூவைப்பற்றித் தானே முன்னுல் அப்படிச் சொன்னுயென்று கேட்டால், அது தன் பிசகைத் தானுக உணர்ந்து அதற்காக வெட்கப்படவும் செய்யும்; அதற்குப் பின் அந்த மாதிரி பொய்யும் சொல்லாது. அடுத்த வீட்டில் பலகாரம் செய்துகொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிற குழந்தை, தன்னை அப்படிப் பலகாரம் தின்னுகிறதற்கில்லாத குழந்தையென்று நினைத்துவிடக் கூடாதென்றெண்ணி, எங்கள் வீட்டிலும் எங்களம்மா பலகாரம் செய்திருக்கிறுளே! பிறகு தின்போமே! என்று பொய்யும் சொல்லும். அந்தக் குழந்தை வீட்டிலும் அப்படிப் பலகாரம் செய்வதாக இருந்தால் மட்டுந்தான், இப்படிப் பெருமைக்காகச் சொல்லும் பொய் நிற்கும்.

சில சமையம் பொறுமையின் பேரில் அற்பத் தனமாகவும் (the malevolent lie) குழந்தைகள் பொய் சொல்லும். தன் பேரில் எவரும் பிரியமா யிருக்கவில்லையென்று தன்னைத்தானே குறைவாக நினைத்துக்கொண்டிருக்கிற குழந்தையே இப்படி அதிகமாகப் பொய் பேசும். அப்படிக் குழந்தையிடம் நாம் அன்பு செலுத்தி நம்மிடம் பிரியமும் ஏற்படும்படியாகச் செய்தபின் இப்படிக் குற்றத்தை எடுத்துக் காட்டினுல் தன்னைத் திருத்திக் கொள்ளவும் செய்யும்.

அடிக்கடி அடிபடுகிற குழந்தைகளே, தங்களை அடிப்பார்கள், கோபிப்பார்களென்று பயந்து (the excusive lie) பொய் சொல்லும். அடிக்கிறதையும் கோபிக்கிறதையும் நிறுத்தாதவரை பொய் சொல்லுகிறதையும் நிறுத்த முடியாது.

சில குழந்தைகள் பிறர் குற்றங்களையும் தாங்கள் செய்ததாகச் சொல்லி, (the lie of loyalty) பிறரைக் காப்பாற்றும். இதுவும் நல்லதில்லை யென்றபோதிலும், அவசியம் கண்டிக்க வேண்டிய பொய்யுமாகாது.

ஒரு குழந்தையின் உடை அவலட்சணமாக இருக்க நன்றுக இருக்கிறதென்று சொல்லுவதும் பொய்தான். இது வெள்ளைப் பொய் (White lie, Conventional lie) பாதகமில்லாத பொய்யாகும். ஆனுல், இப்படி அடிக்கடி பொய் சொல்லும்பொழுது உண்மையில்லாத குழந்தை நம்பத் தகாத குழந்தையெனப் பெயராகும். அப்படிப் பெயர் வாங்குவதும் நல்லதல்ல. ஆகையால், வெள்ளைப் பொய்யும் கூடியவரை தவிர்க்க வேண்டிய பொய்யேயாகும்.

தன்னைப்பற்றிப் பெருமையாக நினைக்க வேண்டுமென்று பொய்யும் புரட்டுமே பேசி வருகிற குழந்தையை (the pathological lie) எப்படியெல்லாம் பெருமை யடைய வேண்டுமென்று அது நினைக்கிறதோ அத்தகைய நன்மையான காரியங்களில் உண்மையிலேயே பெருமையடையச் செய்தால் மட்டுந்தான் அப்படிப் பொய் பேசுதல் நிற்கக்கூடும். ஆதலால், அப்படிக் குழந்தைகளை அவ்வித முயற்சிகளில் ஈடுபடச் செய்து அவை சித்தியாவதற்கும் உதவ வேண்டும்.

குழந்தைகளைக் கடுமையாகத் தண்டித்தல் என்பது கூடாது. தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டாலும் நியாயமான தண்டனை கொடுக்கவே வேண்டும். அப்படித் தண்டனை கொடுப்பதும் அன்புடன் செய்வதாக இருக்க வேண்டும். எப்பொழுதும் அவர்களிடம் அன்பாயிருந்துவர வேண்டும்.

Teaching.

ஆ. உடற்கூறு மருத்துவம் உணவு வாழ்க்கைக் குறிப்புக்கள்

I. முசுமுசுக்கை இலை:

இருமலுட னீளை யிரைப்பு புகைச்சல்
மருவுகின்ற நீர்த்தோடம் மாறுந்—திருவுடைய
மானே! முசுமுசுக்கை மாமூலி யவ் விலையைத்
தானே யருந்துவர்க்குத் தான்.

—அகத்தியர் குணவாகடம்.

இதனால் இருமல், ஈளை, இரைப்பு, புகைச்சல், சலதோடம் முதலியன நீங்கும். ஊற வைத்த புழுங்கலரிசியுடன் இவ் விலையையும் சேர்த்து அரைத்துச் சிறிது உப்புக்கூட்டி அடை சுட்டுக்கொடுத்துவரக் கோழைக் கட்டு, இருமல், ஈளை நீங்கும்.

—வைத்திய இரத்தினம் முருகேச முதலியார்.

II. பொடியான வெள்ளை யரிசியையே வெகுவாக உண்பதாலும், அதன் மேற் பாகத்திலுள்ள உயிர்ச் சத்தையும் (Vitamins) சத்தான பிசிதத்தையும் (Proteins) விலை மதித்தற்கரிய எரியத்தையும் (Phosphorus) அரிசியைப் பளபளப்பாக்குவதற்காக அதிகமாகத் தீட்டியும் அரைத்தும் போக்கிவிடுவதனி னாலும், அதற்கும் மீந்து நிற்கிற எரியத்தையும் சமைக்குமுன் அரிசியை அதிகமாகக் களைந்து போக்கிவிடுவதினாலும், கொதித்து வெந்தபின் வடிப்பதில் எஞ்சியுள்ள காலகத்தை (Nitrogen) யும் எரியத்தையும் பின்னும் வெகுவாகக் கஞ்சியோடு கழித்துவிடுவதினாலும், அரிசியுணவு சத்தில்லாத உணவாகச் சொல்லப்படுகிறது. பருமனாகவும் வேறு நிறமாகவும் உள்ள அரிசிகளிற் சிலவற்றை அதிகமாகத் தீட்டாமலும் களையாமலும் வடித்துண்ணும்போது அவை கோதுமையை யடுத்துச் சத்துள்ளனவாகவும் சாதாரணமாக நம்புவதற்கும் அதிகச் சத்துள்ளனவாகவும் பெங்களூரிலிருக்கும் இந்திய விஞ்ஞானக் கலாசாலை செய்து வந்திருக்கும் ஆராய்ச்சிகளால் தெரிகிறோம்.

அரிசியை அதிகமாகத் தீட்டி அதிக வெளுப்பாக்கும்போது அதன் மேலுள்ள மற்றச் சத்துக்களோடு அதன் முளையை யடுத்திருக்கும் எண்ணெய்யும் போய் விடுகிறது. இப்படிச் செய்து எண்ணெய்யைப் போக்காமல் ஈரிப்பில்லாத இடத்தில் வைத்திருப்பது போன்ற காரியங்களினாலும் அரிசியைக் கெடாமல் பாதுகாத்துக்கொள்ளக் கூடு மென்றே தோன்றுகிறது; ஆனால், அதனைப் பற்றி இன்னும் பரிட்சைகள் செய்து பார்த்தாக வேண்டியிருக்கிறது. பச்சையரிசியைக் காட்டிலும் புழுங்கலரிசி அதிக நாள் கெட்டுப்போகாமலுமிருக்கிறது. (தீட்டுதலினாலும், புழுங்கலரிசியின் . சத்துக்கள் அதிகமாகக் கழிவதில்லை. ப-ர்.)

பிசிதம் அதிகமிருப்பதற்குத் தக்கதாகவே வளர்ச்சியும் அதிகமாகும். வேறு நிறப்பரு (coarse) அரிசியில் உயர்ந்ததரப் பிசிதமும் கனியப் பொருள்களுமிருப்பதால், அதனை உண்டு வளர்வன நன்றாகவும் வளர்கின்றன.

—Indian Information.

2. மழையின்றிக் குளிராயுள்ள காலந்தான் உலாவுதற்குச் சிறந்தது. மழை இலே சாய்ப் பொசு பொசு என்று தூறினாலும், தக்க உடையிருந்தால் உலாவப் போகலாம். மழைத்துளி முகத்திற் படும்போதே ஒரு வகைப்பட்ட சுகவுணர்வும் குதூகலமும் உண்டாகின்றன.

உலாவுதற்குக் காலை சிறந்தது; ஏனெனில் மற்ற நேரங்களினும் அந்நேரத்திலே காற்றுச் சுத்தமாயிருக்கும். உணவு வேளைகட்குப் பின்னும் சிறிதுபோது உலாவுவது நல்லது. சீரணத்துக்கு அது அனுகூலம் செய்வதும் அன்றி, இரத்தோட்டத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. மாலையிலும் இரவிலும் உலாவுவது நரம்புகட்குச் சுகம்.

உலாவுதற்கு ஏற்ற இடம் இராத வீதி என்று. பரந்த புல்வெளிகள், இருபுறமும் மரவரிசைகளையுடைய காட்டுச்சாலைகள், மலைப்பாதைகள் இவையே அதற்கேற்றவை.

உலாவுதற்கு "அன்னநடை" ஆகாது. குறைந்த அளவு மணிக்கு மூன்றரை அல்லது நாலு மைல் வேகம் நடக்கவேண்டும்.

உலாவும்போது, எப்போதேனும் சற்று இளைப்பாறுவதும் அவசியமாகவிருந்தால்,காலை மடக்கி உட்காராது, நீட்டி உட்காரவேண்டும். மடக்கி உட்கார்ந்தால், எழுந்திருக்கும்போது முட்டு வலிக்கும்.

—நல்வழி.

III. பச்சடிக்கீரை (Lettuce) இலெட்டூசுக்கீரையுடன் சேர்த்து உபயோகிக்கக்கூடிய கரிநீரகைப் பொருட்கள் உரொட்டி, அரசி, உருளைக்கிழங்கு முதலிய கிழங்குவகைகள்.

இலெட்டூசுக் கீரையில் நூற்றுக்கு மூன்றே மூன்று பாகம்தான் கரிநீரகைச் சத்து இருக்கிறது. ஆகையால், அது நீரிழிவு வியாதியுள்ளவர்களுக்கும் தூல சரீரிகளுக்கும் நல்லது.

இலெட்டூசுக் கீரை நம் மதிப்பிற்குரியது! அதற்கு நல்ல உணவுக் குணமும் மருந்துக் குணமும் இருக்கிறது. அதிலே ஏ, பீ, ஈ ஆகிய உயிர்ச்சத்துக்கள் மிகுதியாக இருக்கின்றன; சி உயிர்ச்சத்து, இவற்றினும் அதிகமாக இருக்கிறது, தவிர, சுதையம் (Calcium), எரியம் (Phosphorus) இரும்பு என்ற கனியங்களும், ஒரு நல்ல தினுசு தாவர குருதி நிறமியும் (Vegetable haemoglobin) அதிலே ஏராளமாக இருக்கின்றன. சோகை வியாதியுள்ளவர்கள் இந்த மாதிரிக் கீரைகளைப் பச்சையாகச் சாப்பிடவேண்டும். அந்த வியாதிக்கு இரும்பும் குருதி நிறமியுந்தான் அவசியம். சாதாரணமாக, மருந்துகளில் இருக்கிற இரும்பைச் சீரணிப்பது சிரமம். அஃது இலேசிலே தேகத்தில் சேராது. ஆனால் இலெட்டூசு போன்ற கீரைகளிலுள்ளது சுலபமாகச் சீரணமாகும்.

அதிலுள்ள கனியங்கள் கூழ்போல இருக்கும். இப்படி இருப்பவற்றைத்தான் நம்முடைய உடம்பு ஏற்றுக்கொள்ள முடியும். இலெட்டூசுக்கு ஒரு தனி மணமுண்டு. ஆகையால்தான், அநேகருக்கு வேறெந்தக் கீரை பிடிக்காவிட்டாலும் இலெட்டூசு பிடிக்கும். சீவசத்தி என்பது என்ன? அது எப்படியிருக்கும்? என்று இன்னும் ஒருவருக்குந்தெரியாது. அது இதுகாறும் நம் ஆராய்ச்சிக்குத் தட்டுப்படவில்லை. ஆனால் அப்படியொரு பொருள் இருக்கிறது. அது சீவனுக்கும் ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாத தென்று மட்டும் நமக்குத் திட்டமாகத் தெரிகிறது. இந்தச் சீவசத்தி இலெட்டூசுக் கீரையிலும் இருக்கிறது. ஆகையால், அதன் அருமையும் உபயோகங்களும் நம் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டியது அவசியம்.

வீட்டுக்கொல்லையிலே அதனைப் பயிர் செய்யலாம். கொல்லையில்லாதவர்களுங்கூட, அதனைச் சட்டிகளிலும் பெட்டிகளிலும் வைத்துப் பயிர் செய்யலாம். இலைகளெல்லாம் முற்றின பிறகுதான் தின்ன வேண்டுமென்கிற நியதியில்லை. அவை இளசாயிருக்கும் போதே, அதாவது செடி ஒன்றிரண்டு அங்குல உயரம் வளர்ந்தவுடனேயே கிள்ளித் தின்னலாம். அவை வாய்க்கு உருசியாக இருக்கும்.

சிலர், இலெட்டூசுக் கீரை சாப்பிட்டால் வயிறு வலிக்கிறதென்பார்கள். இதற்குக் காரணம் அவர்கள் நன்றாகமென்று சாப்பிடுவதில்லை. இப்படிப்பட்டவர்கள் பஞ்சிலைகளாகப் பார்த்துச் சாப்பிடவேண்டும். இலைமுற்றலாக இருந்தால், சன்னமாக நறுக்கிக்கொள்ள வேண்டும்.

இலெட்டூசுமேலே கொஞ்சம் எலுமிச்சம் பழச் சாற்றையும் விட்டுக்கொள்ளலாம். இரண்டுக்கும் சரியான பொருத்தம். வாசனை நன்றாக இருக்கும். ஆனால், கீரையோடு அரிசி கிழங்கு போன்ற கரிநீரகைப் பொருள்களைச் சேர்ப்பதாக இருந்தால், அதனை உபயோகிக்கக் கூடாது.

இக்காலத்திலே கம்பெனிக்காரர் மீன் எண்ணெய், அல்ட்ராவயலெட் கதிர் முதலியவற்றைப்பற்றிப் பிரபலமாக விளம்பரம் செய்கிறார்கள். நாமும் அவற்றைப் பெரிதாக எண்ணுகிறோம். இந்த நிலைமையில் கீரையை யார் கவனிக்கிறார்கள்? கிள்ளுக்கீரைதானே என்று அதனைப் புறக்கணிக்கிறோம். ஆனால், மீன் எண்ணெய்யிலிருக்கிற சத்து, கீரையிலும் இருக்கிறது. பண்டிதர் செர்மன் (Sherman) சொல்லுகிறார்: மீன் எண்ணெய்யிலே முட்டிக்கால் வளைவுகால் வியாதிவராமல் தடுக்கக்கூடிய சத்து இருப்பது உண்மையே. ஆனால், அதே சத்து அனேக சாதாரண பதார்த்தங்களிலும் இருக்கிறது; முக்கியமானவை முட்டையின் மஞ்சட்கரு, பால், வெண்ணெய், கீரை முதலியன.

பண்டிதர் செர்மன் சொன்ன இந்தப் பதார்த்தங்களை ஒரே நேரத்திலும் சாப்பிடலாம். அவை ஒன்றுக்கொன்று பொருத்தமானவை.

கிராமச் சீரமைப்பு

H. S. M. Ishaque, Director of Rural Reconstruction, Bengal.

Bulletin No. II

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

கிராமச் சீரமைப்பின் முடிவான நோக்கந்தானென்ன? அதனை எப்படித்தான் நாம் அடையலாம் என்னும் கேள்விகளுக்கு நாம் இப்பொழுது பதில் சொல்லுவோம். நாம் எல்லாந் தெரிந்தவர்களில்லை. புதுக்கருத்துக்களும் யோசனைகளும் எங்கிருந்துவந்தாலும் அவற்றை நாம் எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளுவோம். ஆனால், அந்தக் கருத்துக்கள் நம்முடைய பரிட்சையில் ஒப்பேற வேண்டும்.

சில பெரிய மனிதர்களுங்கூடக் கிராமங்களெல்லாம் கைத்தொழிற் பட்டினங்களாக மாறி விடுவதே கிராமச் சீரமைப்பின் முடிவான குறிக்கோளென நினைக்கிறதாகத் தெரிகிறோம். முதலாளிகள் தொழிலாளிகள் இவர்களின் இணக்கத்தையும்பாதுகாப்பையும் நாம் தெரிய விரும்புகிறோம்; மற்றப்படி, நம் நாடெங்கும் பெரிய ஆலைத்தொழில்களும் குடிசைத்தொழில்களும் பெருக வேண்டுமென்னும் ஆசையிலும் எவருக்கும் நாம் பின்னடைந்திருக்கவில்லை. இப்பொழுது விவசாய வேலைகளிலீடுபட்டிருப்பவர்களில் கால்வாசிப்பேர்களேனும் வேறு வேலையைத் தேடிப் போனாலன்றி மற்றும் விவசாயிகள் செழிப்பாக வாழ முடியாதென்பதை வற்புறுத்தியே வருகிறோம். ஆனால், ஆலை நிறைந்த பட்டினங்களில் வாழும் வாழ்க்கை ஒரு வாழ்க்கையாகாதென்றும் சொல்லுவோம். மேல் நாட்டாரும் அப்படி வாழ்வதைச் சமீபத்தில் விட்டுவிடக் கூடுமென்று நினைப்பதற்குப் போதிய காரணங்களிருக்கின்றன. அஃதெப்படியிருந்தாலும், நமக்கு அது சாத்தியப்படாதென்பது மட்டுமல்ல; சாத்தியப்படுமென்றாலும், நாம் கிராமங்களை விட்டுவிட்டுப் பட்டினங்களில் போய்ச் சேருவதைப்போன்ற கேடு வேறு எதுவுமில்லையென்பது நம்முடைய உறுதியான நம்பிக்கையாகும். நாமாகச் செய்துள்ள அலங்கோலத்தை யொழித்துவிட்டால், நம்முடைய அழகான கிராமங்கள் நமக்குக் கிடைத்ததற்கரிய பெரும் பேறேயாகும். சுத்தமான காற்றும் தெளிவான ஆகாயமும் திறந்த வெளியும் பச்சைப் பசும்புற்றரையும் இவையனைத்தும் பட்டின வாழ்க்கை எவ்வகையிலும் ஈடுபண்ணமுடியாத இயற்கை அருங்கொடைகளாகும். நமக்கு வேண்டியனவெல்லாம் கிராம வாழ்க்கையின் பலவேறு துறைகளையும் திருத்துவதுமூலமாகவும் நம் வாழ்க்கையை இனிமையாகக் கூடியனவற்றை நம் கிராமங்களில் அமைப்பது மூலமாகவும் கிராமக் கடும் உழைப்பை இனிமை கலந்த உழைப்பாக்குவதும் நம் கிராம வாசிகளைப் பட்டினவாசிகள் பொறாமைப்படும்படியாக உடம்பும் மனதும் சோர்வடையாதும் திறம்படைத்தும் இருப்பதுடன் சௌகரியமாகவும் வாழுகிற கிராமத்தாச் சீரியர்களாக்குவதுமேயாகும். அவைதான் நம்முடைய முடிவான குறிக்கோள்; அதுவே சரியான குறிக்கோள் என்றும் பூரணமாக நம்புகிறோம். அந்தச் சரியான நோக்கத்தையே கிராமச் சீரமைப்பும் கொண்டிருக்கிறது.

நாம் செய்யப்போகிற வேலையை இந்தச் சிறு குறிப்பில் அவசரம் அவசரமாகச் சொல்லுவதின் மூலம், செய்யவேண்டியதிருக்கும் சிக்கலான வேலைகளின் சிரமத்தை நாம் குறைத்துக் காட்ட விரும்பவில்லை. எந்த நாட்டாரையும் பொருளாதாரத்திலும் தேக திடத்திலும் சமூக நிலையிலும் விருத்தி செய்யப்புகும் வேலையானது மிகவும் விரிவாகவும் வெகு நுட்பமாகவும் முன்னக்கூடியே யோசனை பண்ணிச் செய்ய வேண்டிய காரணமாகும். அது தூங்கிவிழிக்கு முன், ஓரிரவில்செய்திடவும் முடியாது. அதற்கு இதுவரை ஒருவரும் குறுக்குவழி கண்டுபிடித்திருக்கவுமில்லை. ஆனால், ஒன்று மட்டும் திட்டமாகச் சொல்லுவோம். உண்மையாகவும் பூரணமாகவும் ஒரு நாட்டார் புத்துயிர் பெறவேண்டுமென்றால், அதற்காக அந்த நாட்டார் தங்களுக்குள் முயற்சிக்க வேண்டும்; அந்தச் சுமையின்

பளுவை யெல்லாம் தாங்கவும் வேண்டும். அது வேறு வகையாகச் சாத்தியமாகக் கூடுமென்று சொல்லுவதற்கில்லை; நம்புவதற்குமில்லை. ஆகையால், நம் நாட்டார் இதற்காகத் தயாராக வேண்டும்; தயாரிக்கப்படவும் வேண்டும்.

நம் வங்காளத்தைச் சிறந்த வங்காளமாகவும் நம்மவர்களையெல்லாம் சிறந்தவர்களாகவும் ஆக்கும் அந்தப் பெரிய காரியத்திற்குத் தங்களுடையனவற்றில் மிகச் சிறந்தனவற்றையும் தியாகம் செய்வதற்குத் தயாராயிருப்பவர்களும் ஊழியம் செய்வதையே குறிக்கோளாக ஆவேசம் கொண்டிருப்பவர்களும் இந்தச் செய்தியிலும் திட்டத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தால், அத்தகைய சில ஆடவருக்கும் பெண்டிருக்கும் நாம் கீழே கண்டவிதமாகச் சிபார்சு செய்கிறோம்.

க. கிராமவாசிகளிடையே, அவர்கள் மனமார ஊக்கமும் புத்துயிரும் பெறவும் உலகத்தைத் தெரியவும், நாடகங்களாலும் பாட்டுக்களாலும் சுவரொட்டி விளம்பரங்களாலும் பிரசங்கங்களாலும் நேருக்குநேர் பேசும் பேச்சுக்களாலும் எல்லா வகையாலும் தீவிரமான பிரசாரத்தை ஆரம்பித்து அதனை நடத்தி வாருங்கள். அவர்களோடு தனித்துப் பேசுவதின் மூலம் அவர்களுடைய நிலைமையை யறிந்து அவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற அனுதாபத்துடன் அவர்களுக்கும் நல்ல காலம் பிறக்கக்கூடுமென்பதை அவர்கள் நம்பும்படியாக விளக்கிக் காட்டுங்கள். அவர்கள் பிறரோடு கலந்தும் இடைவிடாதும் உறுதியாகவும் முயற்சி செய்துவந்தால், அவர்கள் அதிகக் களிப்புடன் காலங் கழிக்கவும் தங்களைத் தாங்களே சிறந்தவர்களாக்கிக் கொள்ளவும் கூடுமென்று அவர்களுக்குத் தெளிவாகப் படும்வரை அவர்களுடைய சந்தேகங்களையும் தெளிவித்து, வேண்டும் விவரங்களையும் எடுத்துச் சொல்லுங்கள். அது எளிதாகச் சாத்தியமாகிற வேலையல்ல. ஆகையால், அதில் நீங்கள் சீக்கிரமாக வெற்றியடையக்கூடுமென்றெதிர்பார்க்க வேண்டாம். ஆரம்பத் தவறுதல்களினாலும் சிரமங்களினாலும் நீங்கள் நம்பிக்கை யிழந்துவிடக் காரணமுமில்லை. உறுதியான உழைப்பு எப்பொழுதும் தவறுவதில்லை.

உ. ஊக்கம் அன்பு உழைப்பு தியாகம் இவை எந்நேரமும் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் மனதையுடையவர்களைத் தலைவர்களாகக் கொண்ட கிராமச் சீரமைப்புச் சங்கங்களை ஏற்படுத்துங்கள். தாம் பெறுவதைக் காட்டிலும் பிறருக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டு மென்ற கவலை கொண்டவர்களும் மற்றவர்களுக்காக உண்மையாக அனுதாபப்படுகிறவர்களுமே பிறருக்கு வழிகாட்டவும் அவர்களிடத்தில் நம்பிக்கை யுண்டுபண்ணவுங் கூடும்.

ந. கிராமத்துக்கும் கிராமவாசிகளுக்கும் தேவையா யிருப்பனவற்றை யெல்லாம் ஒன்றும் விடாமல் விரிவாகவும் குறித்துக் கொள்ள வேண்டும். அவர்களைப் பொருளாதார வகையிலும் சமூக நிலையிலும் தேக திடத்திலும் எல்லா வகையிலும் எவ்வளவு தூரம் உயர்த்தக்கூடுமோ அவ்வளவு தூரமும் உயர்த்திவிட வேண்டுமென்ற ஆசையுடனும் அவர்களையும் சாத்தியப்பட்டால் நிபுணர்களையும் கலந்து சர்ச்சை செய்துகொண்டு அவற்றிற்கான தகவல்களை யெல்லாம் சேர்த்தும் வகை வகையாகப் பிரித்தும் வைத்துக் கொள்ள வேண்டும்.

ச. கிராம வாழ்க்கையின் எதொரு துறையையும் விட்டு விடாமல், உண்மையில் எல்லா வகையிலும் முன்னேறுவதற்கான நடைமுறைத் திட்டமொன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள். அந்தக் கிராமத்தார் ஒவ்வொருவரும் தாங்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் தேகதிடத்திலும் விருத்தியாகக் கூடுமென்பதைக் கணக் காணட்டும், நினைக்கட்டும், செய்யட்டும்.

ரு. கிராம மத்தியில்-சுத்தமான திறந்த வெளியில், அந்த ஊர்க்காரரைக் கொண்டே மூங்கிலையும் வைக்கோலையும் வைத்துப் பதினைந்து இருபது முழத்திற்குக் குறையாமல் ஒரு பந்தல் போட்டுக் கொள்ளுங்கள். அந்த இடத்தையே ஒரு அழகான இடமாகவும் சங்கத்திற்குத் தலைமையான இடமாகவும் வைத்துக் கொள்ளுங்கள். மூங்கிலினாலேயே இருப்பதற்கேற்ற பெஞ்சுகளையும் செய்து கொள்ளுங்கள். கிராமத்தார் கூடும் களிப்பிடமாகவும் (club) கிராம இரவுப் பள்ளிக்கூடமாகவும் அஃதிருந்து வரட்டும்.

சா. நீங்களே கற்பிப்பதற்குத் தயாராக இருங்கள்; அல்லது உற்சாகமும் திறமையும்

நிறைந்த ஆசிரியர்களையேனும் அந்தப் பள்ளிக் கூடத்திற்காகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அந்தக் கிராமத்திலுள்ள வயது வந்தவர்களை வாரத்தில் நான்கு முறையேனும் இரவுப் பள்ளிக்கு வந்து, படிக்கும்படி செய்யுங்கள்; அறியாமையும் எழுதப் படிக்கத் தெரியாமையும் குற்றமும் பாவமுமாகட்டும்; கூடுமானால், காலை (பகல் ப-ர்) நேரத்தில் பெண்கள் படிப்பதற்கும் ஏற்பாடு செய்யுங்கள்.

எ. கீழே கண்டவிதமாகக் கிராமாபிவிருத்தி நிதியைச் சேருங்கள்:

(அ) பொதுக் கூட்டம் கூட்டி, தினம் இரண்டு வேளைச் சாப்பாட்டுக்கேனு முள்ளவர்களை யெல்லாம் பிடியரிசி போட்டு வரும்படி சொல்லுங்கள். அவர்களெல்லாருக்கும் பிடித்தவர்களாகச் சிலரை அந்தப் பிடியரிசியைச் சேகரித்து வரும்படி திட்டஞ் செய்யுங்கள்; ஒவ்வொருவருக்கும் அவரவர்களிடமிருந்து சேருகிற அரிசிக்கு ஒரு குறிப்புக் கொடுத்து வாருங்கள். இப்படிச் சேகரிப்பதை யெல்லாம், அந்தக் கிராமத்திலேயே சிறந்த பொறுப்பாளரிடம் சேர்ப்பியுங்கள். அவர் பொருளாளராக இருந்து அந்த நிதியின் வரவு செலவுக் கணக்கும் கொடுத்து வரட்டும்.

(ஆ) ஒவ்வொரு அறுவடையிலும் நெல்லாகவும் மற்றும் விளைபொருள்களாகவும் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் கொஞ்சம் சேகரித்து அதையும் பொதுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளுங்கள். இப்படி வசூலாவதில் முக்கால் வாசிக்கு மேற்போகாமல் பள்ளிக் கூடம் முதலிய சங்க வேலைகளுக்காகச் செலவழித்துக் கொள்ளலாம். கால்வாசியை, ஆரம்பத்தில் அந்த ஊரிலேயே தக்காரிடம் கொடுத்து வைக்கலாம்; பின்னால் தபாலாபீசில் போட்டு வரலாம். வீட்டுக்கு எட்டணாவாக வசூல் செய்தாலும், ஓராண்டில் ஐம்பது இலட்ச ரூபாவுக்கு மேல் நாம் கிராமங்களில் வசூல் செய்யலாம். அப்படி யிருக்க, ஏதேனும் சொற்ப அசம்பாவிதம் நடந்தாலும் நமமவர்கள் பட்டினியா யிருக்கும்படியாக நேர்வதும் அடுத்தவர்கள் உதவியினாலேயே பிழைக்கும்படியாக இருப்பதும் மிகவும் வெட்கக்கேடான காரியமாகும். பெருமை பேசித் திரியும் ஒவ்வொரு [illegible] பச்சை[illegible]னும் இதற்கு வெட்கப்படவும் [illegible] கூடியவை[illegible] துக்ககரமான[illegible] யொழிப்பதற்காக [illegible] வது [illegible]த் தவிர்த்துக் கொள்ளவும் வேண்டும். உங்களுடைய கிராமத்தில் பட்டினியா யிருக்கும் ஏழைகளையும் மற்றப்படிக்கு பிறர் உதவி தேவையா யிருப்பவர்களையும் கவனிக்க வேண்டியது உங்கள் கடமையாகும்.

அ. தண்ணீர் சரியாகப் பாய்ச்சுவதாலும் அவசியமானபொழுது நன்றாக வடியவிடுவதாலும் அதிக உரமிடுவதாலும் நல்ல விதைகளாலும் சிறப்பாகச் சாகுபடி செய்வதாலும் உங்களுடைய விவசாயத்தையும் உங்களுடைய ஆடுமாடுகளையும் எவ்வளவு தூரம் விருத்தி செய்து கொள்ளக் கூடுமோ அவ்வளவு தூரம் விருத்தி செய்து கொள்ளுங்கள். இவற்றைப் பற்றி அடுத்தத் துண்டுப் பத்திரிகையில் விவரமாகச் சொல்லுவோம்.

கூ. சாலைகளை விசாலமாகவும் நேராகவும் தல தாபனங்களின் உதவியையும் பெற்று அமைத்துக்கொள்ளுங்கள். ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமம் போக நல்ல சாலைகள் மிகவும் அவசியம். வியாபாரிகள் வருவதற்குச் சௌகரியமான பாதைகள் இருந்தால் தான் விவசாய விளைபொருள்களின் விலையேறும்.

க0. தண்ணீர்த் தேவையைக் கவனித்துக்கொள்ளுங்கள். கிராமத்தில் நல்ல குடிதண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துகொள்ளுங்கள். பொதுவாகச் சுகாதாரத்தையும், சுக வழிகளையும் சொல்லுவதோடு சுகத்தின் முக்கியத்தையும் கிராமவாசிகளுக்கு எடுத்துச் சொல்லுங்கள். குழாய்க் கிணற்றுத் தண்ணீர் கிடைக்காதென்றால், கிடைக்கிற தண்ணீரைக் காய்ச்சிக் குடியுங்கள்.

கக. கிராமத்தில் தண்ணீர் கட்டாதபடி வடித்துவிடுங்கள்; தண்ணீர் கட்டு மிடங்களில் கொசுக்களுண்டாகும். ஆகையால், கிடங்குகளிலுள்ள தண்ணீரை யெல்லாம் வடித்து அவற்றை மூடிவிடுங்கள்; அல்லது சீமை யெண்ணெய்யை யூற்றி கொசுக்களைக் கொன்றுவிடுங்கள்; சில மீன்களும் கொசுக்களின் முட்டைகளைத் தின்று அவற்றை யழித்துவிடக்கூடும்.

க௨. சமுகச் சடங்குகளில் அதிகமாகச் செலவழிக்கக்கூடாதென்று சண்டை போடுங்கள். முன் யோசனையாக வரவையும் செலவையும் குறிப்பிட்டு வரவிற்குள்ளாகவே செல

வையடக்கி வாழப் பழகுங்கள். வேற்றுமையைத் தவிர்த்து வரவும் விவகாரங்களைச் சமாதானமாகப் பேசி முடித்துக்கொள்ளவும் கற்பித்து வாருங்கள். ஒற்றுமையே பலம்.

கங. விவசாயம் செய்வதிலும் விவசாய விளைபொருள்களை விற்பதிலும் மற்றும் பணப் புழக்கத்திலும் குடிசைத் தொழில்களிலும் உங்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவையே (புகுத்துங்கள் ப-ர்) படியுங்கள், பழகுங்கள், பேசுங்கள். நீங்கள் பிறரோடு சேர்ந்து உங்களுடைய வேலைகளை யோக்கியமாகவும் திறமையாகவும் விடாப் பிடியாகவும் செய்து வந்தால், உலகம் உங்களை யெதிர்க்கவும் துணியாது.

கச. எல்லாவற்றையும் தருபவரும் நம்முடைய பிரயாசைக் கெல்லாம் பலனளிப்பவருமான எல்லாம் வல்ல கடவுளிடத்தில் நம்பிக்கைவையுங்கள். மேலும் மேலும் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு, அவர் எல்லாம் கொடுக்கவும் கூடும்; கொடுக்கவும் செய்கிறார். உங்களுடைய முயற்சி யெல்லாம் வெற்றி பெறும்படியாக அவர் ஆசீர்வதிப்பாராக.

(இதன் முந்திய பாகத்தைச்சென்ற இதழிலும் முதல் துண்டுப் பத்திரிகையை அதற்கு முந்திய இதழிலும் வெளியிட்டிருக்கிறோம். கிராமமுன்னேற்றம்பற்றிப் பல புத்தகங்களும் பத்திரிகைளும் கட்டுரைகளும் படித்துவந்திருக்கிறோம். கிராம முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பனவற்றை இந்தக் கட்டுரைகளில் விளக்கியிருப்பது போல வேறெதுவும் இதுவரை விளக்கியதில்லை. அவற்றைத் தவிர்ப்பதற்கான முறைகளை அந்தந்தப் பிரதேசத்திற்கேற்பச் சற்றே மாற்றிச் செய்ய வேண்டியதாக ஏற்பட்டாலும் ஏற்படலாமேயன்றி ஏதேனும் தீவிர முயற்சி செய்யாமல் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளவும் முடியா. கிராமமுன்னேற்றத்துக்காகச் சொல்லப்படுபனவே வெகுவாக இனமுன்னேற்றத்துக்கும் தனிமனிதன் முன்னேற்றத்துக்கும் தனிக் குடும்ப முன்னேற்றத்துக்கும் பொருந்தும். 'அப்பா' என்றதும் உச்சி குளிர்ந்துவிடாது; 'சீனி' என்றதும் இனித்துவிடாது. தலையில் எண்ணெய் வைத்தால்தான் உச்சி குளிரும். நாம் முன்னேறுவதற்கான முயற்சி செய்தால்தான் நாம் முன்னேற முடியும். முன்னேற வேண்டுமென்ற ஆசைகொண்டு அதற்கான முயற்சிகளைச் செய்யாமல், பெரிய பந்தல்கள் போட்டு மாநாடுகள் கூட்டித் தீர்மானங்கள் செய்வதினால் மட்டும் நாம் முன்னேறிவிடமாட்டோம். அப்படிச் செய்வன வெல்லாம் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதையாகவே முடியும். அவற்றால் நம்முடைய கைப்பணத்தையும் நேரத்தையும் விரையஞ் செய்து பிறர் பொறாமையையும் புகழ்ச்சியையும் பெறுவதைத் தவிர்த்து, காரியமான பலனெதுவும் கைகூடுவதில்லை.

ஆகையால், நம் வாசகர்கள் ஒவ்வொருவரையும் இந்தக் கட்டுரைகளைத் திரும்பவும் படித்துத் தங்கள் தனி முன்னேற்றத்திற்கும் குடும்ப முன்னேற்றத்திற்கும் இனமுன்னேற்றத்திற்கும் கிராம முன்னேற்றத்திற்கும் செய்ய வேண்டியன செய்யக்கூடியனவற்றைத் தீவிரமாகச் செய்து முன்னேறிவர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம். ப-ர்.)

---

10. கதை: சரித்திரம்

இரண்டு அடியார்கள்

(ஒரு தால்சுடாய்க் கதை: தமிழ் நாட்டிற்கேற்ப மாற்றி யெழுதியது.)

III

இருவரும் வெய்யில் கடுமையாக இல்லாத நேரம் கொஞ்சம் நடப்பார்கள்; இரவில் வழியடியிலிருக்கும் ஊரில் தங்குவார்கள். இவர்களுக்கு அங்கே படுக்க இடமுந்தருவார்கள்; உண்ணவும் உபசரிப்பார்கள். இவர்கள் உபசாரத்தையும் தள்ளு[illegible]லை. இப்படியாக மூன்று நாள் [illegible]களை கற்பிப்பதற்கு [illegible]தார்கள். வீரவநல்லூர் [illegible]ள்; அல்லது உற்சாகமும் [illegible]

காலையில் வழிப்பிரயாணத்துக்கு வேண்டிய உணவையும் சேகரித்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

கொஞ்ச தூரம் போய் ஆற்றிலுட்கார்ந்து காலை உணவை முடித்துப் புறப்படும்பொழுது, அருளப்பன் பொடி போடுவதை அரசப்பன் பார்த்தான்; "இன்னும் இந்தக் கெட்ட வழக்கத்தை விடவில்லையா" வென்று கேட்டான். "சனியன் விடமாட்டேன் என்கிறது. நான் என்ன செய்வேன்" என்று அரசப்பனுக்குச் சொன்னான். இப்படியாகப் பேசிக்கொண்டே கல்லூரும் கடந்துவிட்டார்கள். அருளப்பனுக்குத் தாகமாக இருந்தது. "நீ பையப் பையப் போ; நான் இந்த ஊரில்போய்த் தண்ணீர்குடித்துவிட்டு வந்து உன்னைச் சேர்ந்துகொள்ளுகிறேன்" என்று சொன்னான். அரசப்பனும் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தான்.

அருளப்பன் வந்த வழியே திரும்பி, கல்லூரில் முன்னடியிலுள்ள ஒரு குடிசைக்கு வந்தான். அந்தக்குடிசை மேற்கூரை ஓலைகள் சில போயிருந்தன. சுவர்களும் பாளம்பாளமாகக் கீறியிருந்தன. உள்ளே தரையும் குண்டும் குழியுமாக இருந்தது. ஒரு கிழவியும் குழந்தையும் கால்மாடும் தலைமாடுமாகப் படுத்திருந்தார்கள். குழந்தை அழுதுகொண்டிருந்தது. அருளப்பன் யார் இருக்கிறதென்று சத்தம் கொடுத்தான். பதிலொன்றுமில்லை. திரும்பவும் இரண்டு மூன்று தடவை சத்தம் கொடுத்தான். கடைசியாக ஈனக் குரலில் யார் கேட்கிறதென்ற சத்தம் கேட்டது. உள்ளேதான் போவோமே யென்று நுழைந்தான். ஒரு கிழவர் [illegible] படுத்திருந்தார். குழந்தை [illegible] அழுதுகொண்டிருந்தது. ஐயா! என்று அந்தக் கிழவரைக் கூப்பிட்டான். அவர் படுத்திருந்தபடியே "ஏன் ஐயா! தொந்தரவு செய்கிறீர். நாங்கள் கிடக்கிற கிடையிலே இதுவேறே தொந்தரவாக இருக்கிறது" என்றார். அருளப்பன் அங்கே ஒரு தோண்டியும் கயிறுமிருக்கப் பார்த்தான். அதனை எடுத்துப்போய்ப்பக்கத்திலிருந்தகிணற்றில் தண்ணீர் எடுத்துக் குடித்தான். தோண்டியைக் கொண்டு வந்து வைக்கிறபொழுதும் குழந்தை அழுது கொண்டிருந்தது. "என்ன, குழந்தை ஓயாது அழுது கொண்டிருக்கிறது. அதனை யாரும் கவனிப்பதாகக் காணவில்லையே!" என்று சொல்லிக்கொண்டிருந்தான். அங்கிருந்த கிழவி எறிட்டுப் பார்த்து, "கஞ்சியில்லை யென்று அழுகிறது. நீ கஞ்சி வைத்திருக்கிறாயா? சும்மா பேசாமற்போ" என்றாள். அருளப்பனுக்குப் போக மனமில்லை. "கையிலே கஞ்சியில்லை; ஏனமிருந்தால் கஞ்சி காய்ச்சித் தருகிறேன்" என்றான். "நீ சும்மா போ; ஏனமிருந்தால் எல்லாம் ஆகிவிட்டதா? இங்கு ஒன்றுமில்லை. நீ ஏனத்தை வைத்து என்ன செய்வாய்?" என்றாள் கிழவி. அம்மட்டிலே அங்கு நிற்க முடியாமல், கடைக்கு ஓடிப்போய் வேண்டியன வாங்கிவந்தான்; தண்ணீரை இறைத்து வைத்தான்; அவலை நனைத்து வைத்தான்; குழந்தைக்குப் பழத்தை உரித்துக்கொடுத்தான். பெரியவரையும் கிழவியையும் முகங் கைகால் கழுவச் சொன்னான்.

(தொடரும்)

---

11. செய்தித் திரட்டு:

அ. உழவு நெசவு வாணிபம் முதலிய தொழிற் செய்திகள்

1. சென்னை விவசாயப் பீடைப் பிணிச் சட்டத்தின்படி மா. த. சென்னை கவர்னர் அவர்கள் தண்டுப்பூச்சியும் (Stem Weevil) (pink boll worm) கீழே கண்ட பிரதேசங்களில் கம்போடியாப் பருத்திக்கும் தார்வார் அமெரிக்கன் என்னும் பச்சநாடன் பருத்திக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவைகளென்றும் அவற்றை யொழிப்பதற்காக 2 வது 3 வது தபசில்கள் தவிர்த்த மற்றப் பிரதேசங்களில் பருத்தி மாறுகளைச் செப்டம்பர் மீ 1உக்குள் பிடுங்கி உலரப் போட்டுவிட வேண்டுமென்றும் எதிலும் செப்டம்பர் 1 உக்குமுன் புதிதாகப் பருத்தி விதைக்கக் கூடாதென்றும் 2 வது தபசில் சம்பந்தப்பட்டமட்டில் செப்டம்பர் மீ 30 உ பிடுங்கி யெறியக்கூடிய கடைசித் தெய்தியாக இருக்குமென்றும் 3 வது

தபசில் சம்பந்தப்பட்ட மட்டில் ஜூன் 15 ம் உ கடைசித் தெய்தியாக இருக்குமென்றும் தெரிவிக்கின்றனர்.

கோயம்புத்தூர் சில்லா:—கொள்ளேகால் தாலூகா தவிர சில்லா பூராவும்.

சேலம் சில்லா:—ஓமலூர், திருச்செங்கோடு, சேலம், நாமக்கல், இராசிபுரம், ஆத்தூர் தாலூகாக்கள்.

திரிசிராப்பள்ளி:—சில்லா பூராவும்.

மதுரை:—கீழே 1 வது தபசில் குறித்துள்ள திருமங்கலம் தாலூகாவைச் சேர்ந்த கிராமங்கள் தவிர சில்லா பூராவும்.

இந்த அறிவிப்பு 3-வது தபசில் சம்பந்தமாக மே ஸ்ரீ 20-ம் உ முதலும் மற்றப்படி ஆகஸ்டு மாதம் 1 உ முதலும் அமுலுக்கு வரும்.

1 வது தபசில்.

ஆயக்குளம், மாத்தூர், கரிகாலம், காத்தான், தம்பிபட்டி, உருத்திரப்ப நாயக்கம் பட்டி, சுப்பனுபுரம், மசரா உள்பட அம்மா பட்டி, முத்துக் குமாரபுரம், குட்டிக் குமார புரம் என்ற மேலப்பட்டி மசராக்கள் உள்பட துலுக்கப்பட்டி, குமாரபுரம், சிதம்பராபுரம் அருணுசலபுரம் மசராக்கள் உள்பட வெள்ளுர், சலுப்பப்பட்டி, சாத்தபிள்ளைபட்டி, கொடிக்குளம் கிராமங்களும் சர்வே 756-ம் பாகமும்.

2வது தபசில்.

கோட்டூர், மலையாண்டிப் பட்டினம், காளியாபுரம், வேட்டைக்காரன் புத்தூர், அங்களக் குறிச்சி, துறையூர் கிராமங்கள்—சல்லிபட்டி அருத்தகாரிபட்டியின் பாகங்கள்.

இந்தக் கிராமங்களில் செப்டம்பர் ஸ்ரீ 30 உ க்குப் பின்னும் வாய்தா வேண்டுமென்றால், விவசாய அதிகாரிகளைக் கலந்து கொண்டு கலக்டர் கொடுப்பார்; ஆனால், செப்டம்பர் ஸ்ரீ 1 உ முதல் இந்தக் கிராமங்களிலும் விதைக்கலாம்.

3வது தபசில்.

கோயம்புத்தூர் சில்லா கோயம்புத்தூர் தாலுகாவிலுள்ள எட்டிமடை, பிச்சனூர், திருமலையம் பாளையம், வழுக்குப் பாறை, அரசிப் பாளையம் ஒற்றைக்கல் மண்டபம், போடிப் பாளையம் மசரா உள்பட சிரிப்பாளையம், மதுக்கரை, மருதம் பட்டி, பாலத்துறை வட்டகை, மைலேறிப் பாளையம் வட்டகைக் கிராமங்கள்.

இந்தக் கிராமங்களில் ஆகஸ்டு ஸ்ரீ 1 உ முதலும் புதுப்பருத்தி விதைக்கலாம்.

G. O. Mis. No. 435. Development.

2. மாசிப்பட்டம் பருத்தி C. O. 3; C. O. 4. இந்த இரண்டுவகைப் பருத்தியையும் சுத்தமாகக் காப்பாற்றிவருவதற்காக 500 ஏக்கர் விதைப்பண்ணை இரண்டு வருடங்களுக்கு நடத்தி வரவேண்டுமென்று விவசாய இலாகாத் தலைவர் கேட்டுக்கொண்டபடி நம் மாகாண அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

—Mail.

3. பெல்லாரி அனந்தப்பூர் சில்லாக்களில் H-I பருத்திவிதையை விருத்தி பண்ணிச் செலவழித்து வருவதற்காக ஐந்தாண்டுகளுக்கு நூறுயிர ரூபா வரை அனுமதித்திருக்கின்றனர். இதில் நாற்பத்து மூவாயிர ரூபா வரை சிப்பந்திச் சம்பளம் முதலிய செலவுகளுக்காக மத்திய பருத்திக்கழகம் கொடுக்கிறது. சேலம், கோயம்புத்தூர், திருப்பூர் பிரதேசத்தில் கம்போடியாப் பருத்தி C. O. 2 விருத்தி செய்வதற்கும் செலவிடுவதற்குமாக ஆரம்பச் செலவு ஏழாயிர ரூபாவும் வருடந்தோறும் நாற்பத்து நாலாயிர ரூபாவும் செலவிட்டு வரப்படும். செங்கற்பட்டு சில்லாவில் ஆரம்பச் செலவு பதினையாயிரமும் வருடாந்தரச் செலவு பதினெண்ணுயிரத்தை யடுத்தும் ஆகக்கூடியதாக ஒரு நெல் ஆராய்ச்சிப் பண்ணை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. விசாகப்பட்டினம் சில்லா சோமபேட்டை இச்சாப்பூர் தாலூகாக்களில் தேனீ வளர்த்தலை ஒரு குடிசைத்தொழிலாக ஆரம்பித்துச் செய்துவரவும் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

—Mail.

4. சில்லா விவசாய அதிகாரிகள் உரம் விதை வாங்குவதற்காக ஒவ்வொரு தடவையிலும் ரூபா 25 க்கு மேற்போகாமல் கடன் தாலாம். அப்படிக் கடன் வாங்குகிறவர்கள் பொறுப்பின் பேரிலும் அவர்களுடைய நிலத்தீர்வைக்கு ஐந்துமடங்கு வரை கடன் தாலாம். அதனை வருடத்திற்கொரு தடவையாக இரண்டு வருடத்திற்குள் செலுத்திவிடவேண்டும்.

The Madras Government Press Note. No. 67.

ஆம் கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. கைத்தறி நெசவாளர்களுக்காகச் செங்கற்பட்டு ஜில்லா காஞ்சிபுரத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படும். புது மாதிரித் துணிகள் நெய்வதற்கேற்ற தறிகள் அமைத்துக்கொள்ளப் பதினையாயிர ரூபா தரப்படும். கட்டட வாடகைக்காக நாற்பது ரூபாவும் சில்லறைச் செலவுக்காகப் பத்து ரூபாவும் மாதா மாதம் கொடுத்துவரப்படும். இந்தச் சங்கத்தின் வேலையை மேல்பார்ப்பதற்காக ஒரு கீழ்ப் பதிவாளரும் இரண்டு இளம் (junior) பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

—Mail.

2. கிராம அதிகாரிகள் கூட்டுறவுச் சங்கக் காரியதரிசிகளுக்கு இப்பொழுது அமுலிலிருந்துவரும் உத்தரவுகளின்படிக்கும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுடைய நிலங்களின் சர்வே நம்பர்கள் முதலிய விவரங்கள் சொலக் கடமைப்பட்டிருப்பதால், அதுவே போதுமென்றும் வேறு புதிதாகத் தாக்கீது அனுப்ப வேண்டியதில்லையென்றும் அரசாங்கம் கருதுகிறது.

—The Madras Journal of Corperation.

3. R. C. No. 3315/41 A dated 9-1-42

பிரதமச் சங்கங்கள் விளைபொருள்கள் ஈட்டின் பேரில் ஆயிர ரூபா வரை உறுப்பினருக்குக் கடன்தரலாம். அந்தப்படி சங்க விதிகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். அதற்கும் அதிகமாகக் கடன் கொடுக்கலாமென்று திருத்திக்கொள்ள விரும்பினால், அந்தத் திருத்தத்தைப் பதியுமுன் துணைப்பதிவாளர் பதிவாளரின் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. D 527/42 B dated 27-1-42.

கூட்டுறவு விசாரணைக் கழகம் 144 வது சிபார்சைக் கவனிக்கப்பட்டது. தொழிலாளிகளுக்காகத் தனிச் சங்கங்களிருந்தால், அப்படிச் சங்கங்களுக்கு மத்தியபாங்கு உதவி செய்ய வேண்டும். மற்றச் சங்கங்களிலுள்ள தொழிலாளிகளுக்கு அந்தச் சங்கங்கள் கடன் கொடுக்கும் பணத்திற்கு மோசமில்லாத அளவிற்குக் கடன் கொடுத்து வரலாம்.

5. D. N. 1486/42—B dated 16-2-42.

கூட்டுறவு விசாரணைக் கழகம் பட்டினச் சங்கங்கள் உறுப்பினர்களைச் சேர்ப்பதில் அவருடைய யோக்கியதை சொத்து சம்பாத்தியத் திறமை அல்லது திரும்பச் செலுத்தும் சக்தி இவற்றைக் கவனித்தே சேர்க்க வேண்டுமென்றும் அனேகர் சங்கத்திற்கு வந்து சேரும்படியாகப் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் சிபார்சு செய்திருக்கிறது. இவற்றை ஞாபகப்படுத்த வேண்டுமென்பதில்லை; என்றாலும், இவை மிகவும் முக்கியமானவையாதலாலும் இவற்றைச் சங்கங்கள் மறந்துவிடுவதாலும் துணைப்பதிவாளரும் உதவிப் பதிவாளரும் இவற்றை அழுத்தமாகப் பட்டினப்பாங்குகளுக்குச் சொல்லிவர வேண்டும்.

6. R. O. 9286/41—B dated 18-2-42.

பிரதம சங்கங்களின் விதிகளும் அவை இணைக்கப்பட்டிருக்கும் மத்திய பாங்குகள் சங்கங்களின் விதிகளும் முரண்பட்டால், எந்த விதி அமுலுக்கு வருவதென்பது சந்தேகத்திற்கிடமாகி விடுகிறது. ஆதலால், பிரதம சங்கங்கள் தங்கள் விதிகளில் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்துகொள்ள வேண்டும். இந்தத் திருத்த விதி மத்திய சங்கங்களிலிருப்பதால் பிரயோசனமில்லை.

திருத்தம்: இந்தச் சங்க விதிகளுக்கும் இந்தச் சங்கம் இணைக்கப்பட்டிருக்கும் மத்திய சங்கங்களின் விதிகளுக்கும் முரண் ஏற்பட்டால், மத்திய சங்கத்தின் விதிகளே நடைமுறையிலிருக்கும்.

ஒருவன் உன் தயவை வேண்டி இருக்கலாம், உன் துணையைக்கொண்டு முன்னேறுபவனாகவும் இருக்கலாம். அவன் உன்னிடத்தில் உண்மையுள்ளவனாக இருந்தால் உன்னால் முடிந்த மட்டும் உபகாரம் செய்வதற்குப் பின்வாங்காதே. ஆனால் உன்னைக் கவிழ்த்துவிடுபவனாக அவன் இருந்தாலோ அதிலும் ஒரு கண் வை.

இ. கிராம முன்னேற்ற நலதாபன அரசாங்கச் செய்திகள்

பம்பாய் மாகாணத்தின் கிராமாபிவிருத்தி வேலைப் பயிற்சிக்காகச் சென்ற ஆண்டில் தேர்ந்தெடுத்த கிராம உதவிகளின் (Rural Assistants) பயிற்சி அனேகமாக முடிந்துவிட்டது. காளிது வருடம் மே மாதம் முதல் பயிற்சி தருவதற்காக 175 பெயர்கள் அந்தந்தப் பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் பதினெட்டு வயதிற்குக் குறையாமலும் முப்பத்தைந்து வயதிற்கு மேற்படாமலுமிருக்க வேண்டும். மெட்ரிகுலேசன் பரிட்சை தேறியவர்களை முக்கியமாக எடுத்துக்கொள்ளப்படும். தாய் மொழி முடிவுப் பரிட்சையேனும் தாய் மொழி விவசாயப் பரிட்சையேனும் தேறியிருக்க வேண்டும்; அல்லது அங்கில ஐந்தாவது வகுப்புவரைக்கேனும் படித்திருக்க வேண்டும். விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களையும் கிராமவாசிகளாக இருப்பவர்களையும் முதலாவதாக எடுத்துக்கொள்ளப்படும். அவர்கள் கிராமங்களில் போய் வசிக்கவும் வேலை செய்யவும் தயாராயிருக்க வேண்டும். நல்ல நடத்தை யுள்ளவர்களாகவும் சரீர திடமுள்ளவர்களாகவு மிருக்க வேண்டும். கடினமான உழைப்பிற்கும் தயாராக இருக்க வேண்டும். ஒரு வருடம் பயிற்சி தரப்படும். அவர்களுடைய செலவுக்காக மாதம் 20 ரூபா உதவிவரப்படும்; வசிப்பதற்கிடமும் இனமாகத் தரப்படும்.

—Bombay Information.

ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புகள்

சென்னை மாகாணத்தில் 2,70,000 கைத்தறிகளிருக்கின்றன. அத்தறிகளின் மூலம் 10 இலட்சம் மக்கள் பிழைக்கின்றனர். நம் மிந்தியாவில் மொத்தத்தில் ஒரு கோடி மக்கள் பிழைக்கின்றனர் என்று சொல்லலாம். கைத்தறிகள் ஆலைப்போட்டியினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருப்பதுடன் தற்சமயம் பர்மா, மலாய் நாடு, இலங்கை மார்க்கெட்டுகளில்லாததினால், பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மற்றும், நூல்விலை தாறுமாறாக இருந்ததினாலும் கைத்தறிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. தற்சமயம் ஆலைகள் சண்டைக்கு வேண்டிய ஆடைகள் தயார் செய்வதால் கைத்தறி நெசவாளர்களுக்கு இஃது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று கூறலாம். ஏனென்றால், ஆலைகள் தயாரித்த சாதாரண ஆடைகளைக் கைத்தறிகள் இப்போது தயாரிக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதுவுமன்றியும் சப்பான் இறக்குமதியும் நின்று விட்டது.

1940ம் வருட சங்கியைப் படிக்கு நம்மிந்திய ஆலைகளில் 37,900இலட்சம் கசமும் கைத்தறிகளில் 1600 இலட்சம் கசமும், கதர் 120 இலட்சம் கசமும் உற்பத்தி செய்யப்பட்டன. இங்கிலாந்திலிருந்தும்,சப்பானிலிருந்தும் 5600 லட்சம் கசம் துணி இறக்குமதிசெய்யப்பட்டன.

கைத்தறி நெசவாளர்களிடை ஒற்றுமை இல்லாதது பெருங்குறை. ஒற்றுமையை நிறுவச் சங்கங்கள் இல்லை. ஆதோனிக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு சங்க மிருக்கிறது. அது பெயரளவில் சங்கம் என்றிருக்கிறதே தவிர, சங்கத்தினருக்குள் இருக்கும் பிளவுகள் வருத்த முண்டாக்குகிறது. ஆங்காங்குச் சங்கங்கள் தோன்றி ஒற்றுமையாக வேலை செய்தால் நல்ல பலன் கிடைக்கும். உண்மையில், நான் கைத்தறி நெசவாளர்களிடம் அதிக சிரத்தைகொண்டிருக்கிறேன். அவர்களுக்காக நான் நாள்தோறும் எட்டு அல்லது பத்து மணி நேரம் வேலை செய்கிறேன். கைத்தறி நெசவாளர்களும், நூல்கொடுத்து வாங்கும் முதலாளிகளும் கலந்து வேலைசெய்யவேண்டும்.

தற்காலிகமாகச் சேலத்திலும், குடியாத்தத்திலும், இதர இடங்களிலும், நாங்கள் உதவியளிக்கிறோம். அவ்வுதவி இரண்டு மூன்று மாதங்கள் செய்யலாம். பின்னர் செய்வது சிரமம். ஆகையால், கைத்தறி நெசவாளர்கள் உய்வதற்கு நிரந்தரமான உதவிதேடவேண்டும்.

நாம் உலுங்கி மார்க்கட்டை இழந்துவிட்டோம்;ஆனால், இன்னும் உலுங்கி செய்கிறோம். இருபது வருடங்களுக்கு முன் உற்பத்திசெய்த

ஆடையையே நாம் இன்றும் உற்பத்தி செய்கிறோம். அம்மாதிரி செய்வதால், நம் துணிகள் விற்பனை ஆவதில்லை. காலத்திற்கேற்றாற்போல் இரகங்களை மாற்றி நெய்தல்வேண்டும். நம் ஆடைகளை விற்பதற்கு நாம் விளம்பரம் செய்தல் வேண்டும். விளம்பரமில்லாததே கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கியில்லாததற்கு முக்கிய காரணம். மற்றும், கைத்தறி ஆடைகளுக்குப் பளபளப்பும் மினுமினுப்பும் கொடுத்தல் வேண்டும். கோயம்புத்தூர் சேலம் கண்ணனூர் முதலிய இடங்களில் நாங்கள் பாடம் பண்ணிப் பளபளப்புக் கொடுக்கும் எந்திரங்கள் வைத்திருக்கிறோம். கசம் ஒன்றுக்குக் காலணா அல்லது அரையணா கொடுத்து உங்கள் ஆடைகளுக்குப் பளபளப்புக்கொடுத்து விட்டால், அவற்றை எல்லோரும் வாங்குவார்கள். ஆலைத் துணிகளைப் பெரும்பாலோர் வாங்குவதற்குக் காரணம் அவற்றின் மினுமினுப்பும் பளபளப்பும் ஆகும்.

1935-ல் ஆரம்பிக்கப்பட்ட சென்னை மாகாணக் கைத்தறிநெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கைத்தறிக்காரர்களுக்குக் கூடுமான வரையில் உதவி செய்து வருகிறது. அதற்கு 185 கிளைச் சங்கங்கள் இருக்கின்றன. எட்டு விற்பனை யதிகாரிக ளிருக்கிறார்கள். ஐந்தாறு பெயர்கள்-புதுப் புது ரகங்கள் போடுகிறவர்களிருக்கிறார்கள். சங்கத்தைப் பல வழிகளிலும் விருத்தி செய்ய வேண்டியதிருக்கிறது. ஆனால், கிளைச் சங்கங்களின் மூலம் உற்பத்தியாகும் ஆடைகளை விற்பது மிகச் சிரமமாக இருக்கிறது. கைத்தறி நெசவாளர்களின் குறைகளை எடுத்துச் சொல்லும் தினசரி தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளை விளம்பரக் கட்டணத்தைக் குறைத்துக் கொடு என்றால் குறைக்க மாட்டேன் என்கின்றன. அதிகச் செலவு செய்து கைத்தறித் துணிகளை விளம்பரம் செய்ய முடியவில்லை.

சண்டைக்காக வேண்டிய ஆடைகளில் சில தேவைகளுக்கு உத்தரவு பெற்றிருக்கிறோம். சப்ளை செய்வதற்கு ஒரே மாதிரியான ஆயிரம் கைத்தறிகள் ஒரே இடத்தில் ஒருவர் பொறுப்பில் கிடைக்கவில்லை. ஆகையால், சில கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலம் அறுநூறு தறிகளைக் கொண்டு நமக்குக் கிடைத்த உத்தரவுக்காகத் தயார் செய்ய ஆரம்பித்திருக்கிறோம்.

பல கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் பேரில் யாதொரு காரணமுமில்லாமல் ஒருவித வெறுப்புக் கொண்டு எங்கள் அதிகாரிகளை வெறுக்கிறார்கள். நீங்கள் அம்மாதிரி செய்யக்கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆலை முதலாளிகளும் பாங்குப் பிரதிநிதிகளும் மாகாணக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபையிலிருப்பதைப் பற்றி நீங்கள் வருத்தப் படுகிறீர்கள். சங்கத்தின் மூலதனத்தில் 82 சதம் பாங்குகளுடைய பணமாகும். அவ்வாறு இருப்பதால் பாங்குகளுக்குப் பிரதிநிதுத்துவம் கிடைக்கிறது. அதற்காக நீங்கள் வருத்தப் படக்கூடாது. ஆலையின் சொந்தக்காரர்களையும் நீங்கள் உங்கள் நிரந்தர விரோதிகளாகப் பாவிக்கக்கூடாது. கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரிகள் சங்கங்களை மேற்பார்வையிட வந்தாலும் அல்லது உங்களைக் கைத்தறி சம்பந்தமாக விசாரிப்பதற்காக வந்தாலும் நீங்கள் அவர்களுடன் ஒத்துழைத்து உதவுங்கள்.

(கூட்டுறவு) கூட்டுறவுப் பதிவாளர் சத்தியநாதன்.

---

12. அறிவுரைத் திரட்டு.

அ. உழவு நெசவு வாணிபம் முதலிய தொழிற் குறிப்புக்கள்

1. ஐப்பசி-கார்த்திகை (அக்டோபர்—டிசம்பர்) மாதங்களில் பெய்யும் வடகிழக்குப் பருவ மழை (North East Monsoon) எவ்வளவுபெய்யக்கூடுமென்பதைச் செப்டம்பர் முடிவிலேயே நிதானிக்கலாம். அதனைச் சூன் முதல்ஆகஸ்டுமுடியத்தென்அமெரிக்காவிலிருக்கும் காற்றின் அழுத்தத்தை வைத்தும், கீழேயிருந்து 3 ஆயிரக்கோல் (Kilometre) முதல் 5 ஆயிரக்கோல் வரை (ஒரு ஆயிரக்கோல் சுமார் ஐந்து பர்லாங்கு) உயரத்தில் செப்டம்பர் மாதத்தில் பெங்களூரிலடிக்கும் மேல்காற்றை வைத்தும், கீழேயிருந்து ஐந்து ஆயிரக்கோல் முதல் 8 ஆயிரக்கோல் வரை உயரத்தில் செப்டம்பர் மாதத்தில் ஆக்ராவில் அடிக்கும் காற்றை வைத்தும் கணிக்கலாம்.

—Indian Information.

(அடுத்த வேளாண்மைக்கு வேண்டிய மழை பெய்யுமா? என்றொரு கட்டுரை மைசூர்ப் பத்திரிகை ஒன்றில் 25 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்ததாகத் தெரிந்து, அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பார்த்தோம். அதில் திட்டமான விவரங்கள் நாமாகக் கணிக்கக்கூடியதாக ஒன்றும் கொடுக்கப்படவில்லை. இந்தக் குறிப்பில் காணும் துண்டுப்பத்திரிகையில், அப்படி விவரங்களும் கொடுத்திருக்கக் கூடுமென்று நினைக்கிறோம். அந்தத் துண்டுப் பத்திரிகையை வருத்திப் படித்து, அப்படியிருந்தால்—அதன் சாரத்தையும் பின் குறிப்போம். ப-ர்.)

நேப்பியர் புல் மிகவும் சத்துள்ளது. அதனைத்தின்பதால் கறவைப் பசு அதிகப் பால் கொடுக்கும். நேப்பியர் புல்லைத் தண்ணீர் பாயக் கூடிய நிலத்தில் ஏக்கரொன்றுக்கு 2,000 மணங்குக் கதிகமாகவும் ஐந்தாறு தடவையாகவும் வெட்டலாம். வேர்த்துணுக்குகளை அல்லது மேல்வெட்டுத் துண்டுகளை நட்டியும் அதனை வளர்க்கலாம். விதைத்தும் பயிராக்கலாம். ஏக்கரொன்றுக்குப் பதினைந்து மணங்கு விதை செல்லும். வேர்த்துணுக்குகள் மணங்கு மூன்று ரூபாவாகவும் மேல்வெட்டுத் துண்டுகள் மணங்கு ஒரு ரூபாவாகவும் விற்கின்றன. இதற்குமேல் வேண்டும் தகவல்கள் அலகாபாத் விவசாயக் கல்லூரிப் பண்ணை மேலாளரிட (Manager) மிருந்து தெரிந்துகொள்ளலாம்.

—The Allahabad Farmer.

ஆ. கிராம முன்னேற்ற தேச முன்னேற்றக் குறிப்புக்கள்

1. பசு நல்லதா? எருமை நல்லதா?

1. எருமை சினைப்பட சுமார் ஒரு வருடம் பசுவைக் காட்டிலும் பிந்தவே செய்யும்.

2. பால் கறவை நின்றதிலிருந்து கன்று போடும் வரை எருமைக்குச் செல்லும் இடைக்காலம் பசுவுக்குச் செல்லும் இடைக்காலத்திலும் மூன்றுமடங்கிற்கு அதிகமாகும்.

3. நல்ல பசு எருமையைக் காட்டிலும் அதிகப்பால் கொடுக்கவுங்கூடும்.

4. எருமைக் கடாக்கன்று விவசாய வேலைகளுக்குதவக் கூடியதில்லை. அவற்றை விற்றாலும் அதிக விலை கிடைக்காது. ஆகையினால், அவற்றைச் சாதாரணமாகக் கொல்லவே செய்கிறார்கள். பசுவின் காளங்கன்றுகளோ விவசாய வேலைகளுக்குதவும்; நல்லவிலையும் கிடைக்கும்.

5. பசுவைக் காட்டிலும் எருமைக்கு அதிகமாக வியாதிகள் காணும்.

6. எருமையை அதிகமாகவுங் கவனிக்கவேண்டும்; அதற்குத் தண்ணீரும் நிரம்ப இருக்கவேண்டும்; நல்ல மேய்ச்சல் வசதியும் வேண்டும்.

7. வெப்பமோ குளிர்ச்சியோ பசுவைக் காட்டிலும் எருமையை அதிகமாகத் தாக்குகிறது; அதனால் பாலும் குறைகிறது. அவை பசுவை அப்படியாகத் தாக்குகிறதில்லை.

8. பசுவின் பாலிலிருப்பதைக் காட்டிலும், எருமைப்பாலில் வெண்ணெய்ச் சத்ததிகம்; அந்த ஒன்றில்தான் எருமை சிறந்தது. ஆனால், அதற்காகச் செய்கிற வேலையையும் கவனித்தால், நல்ல பசுவின் வெண்ணெய் எருமையின் வெண்ணெய்யைக் காட்டிலும் அதிகமென்றும் சொல்லலாம்.

—Harijan.

2. காளை மாடுகளை நித்தம் குளிப்பாட்டி வருவதினால், அவற்றினிடம் எவ்விதமாகுமென்றும், கறவைப் பசுக்களை நாடோறும் குளிப்பாட்டுவதால் அவற்றின் பாலின் அளவும் தன்மையும் என்னவாகுமென்றும் பரிட்சை செய்து பார்த்ததில்லை. எருமைக்குத் தண்ணீர் பிரியமாதலால், அவற்றை நித்தம் குளிப்பாட்டி வரவேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் அவை சௌக்கியமாயிருக்க (Comfortable) வும் சாதாரணமாகக் கொடுக்கும் பால் கொடுத்துவரவும் முடியும். கறவைப் பசுக்களை குளிர் காற்றுப்படாதபடி மாதத்துக்கொரு தடவை குளிப்பாட்டி உடம்பைச் சுத்தம் பண்ணினால் போதும். பால் கறக்குமுன் பின்னர்

தங்காலையும் வாலையும் மடுவையும் நித்தம் கழுவி வரவேண்டும்.

—Indian Farming.

(கறவைப் பசுக்களைக் குளிப்பாட்டுவதால் உடம்பெல்லாம் குருதியோட்டம் அதிகமாகு மென்றும் அதனால் மடுவில் குருதியோட்டம் குறைந்து விடுமென்றும் அதனால் பாலும் குறைந்து விடுமென்றும் சிலர் சொல்லுகின்றனர் ப-ர்.)

௰௦ இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனைமுறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

1. மருதக்கலியுள் காணுந்தமிழர் எத்தகையர்? அவர் செவியில் பொல்லாச் சொற்கள் புகவில்லையாம். அச் செவிகளே வயலாக, சான்றோர் செய்யுட்களே நீராக, நாவே ஏராகப் புலவர் உழுதுண்டனராம். அவருடையமொழிகள் பழங்கதைகளாக-புராணங்களாக—இருக்கவில்லையாம்! புது மொழிகளாக இருந்தனவாம்! அப் புதுமொழிகளே மக்கள் கொள்ளைகொண்டு உண்டனராம்!

நம் முன்னோர் போற்றிய மொழியும் கலையும் நம்மிடம் உள்ளன. ஆனால், அம் மொழிக்குரிய பற்றுங் கலைக்குரிய உணர்வும் நம்மிடம் இல்லை. மொழிப்பற்றுங் கலையுணர்வும் வளரத்தக்க முயற்சி சிறந்தால் முற்போக்கு உண்டாகலாம். இல்லையானால் என்ன ஆகும்? தமிழர் என்போர் நாகரிகம் இன்றிக் காட்டில் திரிந்து வாழ்ந்து வந்த ஒரு வகுப்பினர் என்று இறந்த காலத்தவராகக் கருதப் பொருள்விளக்க அகராதிகளில் எழுதப்படுங் காலம் வரினும் வரும் போலும்! இதனை நினைக்கவும், நெஞ்சு பொறுக்கின்றதில்லை; வருந்திப் பயனில்லை. தமிழ் மக்களின் உறக்கந் தெளிந்தாற் பயன் உளதாகும்.

மொழி ஆக்கம் பெற்றாலன்றிக் கலை ஆக்கம் பெறுமோ? இனிய தாய் மொழியாகிய தமிழிலேயே எழுதுதல், பேசுதல், வழக்காடுதல், அரசாளுதல் ஆகிய எல்லாம் நடைபெறும் நாள் வந்தாலன்றி நமது எண்ணம் கைகூடுமோ?

(கலித்தொகைச் சொற்பொழிவுகள்)

—வித்துவான் வரதராசனர்.

2. முல்லைக்கலிச் செய்யுளடிகளிற் சில, மக்களின் உயர்ந்த மனப் பான்மையினைத் தெரிவிக்கும். இன்னுஞ்சில, தமிழராவார் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருகின்றவர் என்று கூறி அவர் தம் நாகரிகத்தினைப் பிற நாடுகளுக்கு எடுத்துக் காட்டும். வேறு சில, அந்நிலத்து மக்கள் கொண்ட கடவுட்கொள்கைகளை எடுத்துக் காட்டும். மற்றுஞ்சில, சொன்னயம் பொருணயங்களை எடுத்தியம்பும். மயிர் சிலிர்க்கும் கற்பனைகளும், தலைவர் தலைவியர்க்கிடையே நிகழும் சொல்வன்மையும், மக்களின் உடை, அணி, தொழில், வீரம், பண்பு முதலியனவும் இந்நூலில் தொட்ட தொட்ட இடங்களிலெல்லாம் காணப்படும்.

(கலித்தொகைச் சொற்பொழிவுகள்)

—வித்துவான் நடேசசர்மா.

3. ஒவ்வொரு நாட்டு மக்கட்கும் பரம்பரையின் பயனாய்ப் பிறநாட்டவர்க்கு இல்லாத சிறப்பியல்புகள் சில, வழிவழி வருகின்றன. நம் மக்கட்குரிய பாவங்களும் பண்புகளும் பழக்கவழக்கங்களும், நம் தாய் மொழியில் எழுந்த இலக்கியத்தில் முன்னோரால் இழைக்கப் பெற்றன. அவற்றுக் கிணங்க, நாமும் மரபுவழாது மேலும் புனைந்தால், நமக்குரிய வழியில் அறவளர்ச்சியும் நாகரிகக் கிளர்ச்சியும் அடைவோம்; மன்பதைப் பொது நிலைக்கிற்கும் துணை நின்றவராவோம். இதற்காம் மன எழுச்சி தமிழனிடம் என்றுகாணும்? அன்று 'சூழ்கலி நீங்கும்; தமிழ் மொழி ஓங்கும்.'

—செந்தமிழ்ச் செல்வி.

---

௩. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

1. தமிழ் நாட்டை—தமிழ் மக்களிடை உள்ள ஒரு நோய் உங்களையும் அடையா திருக்கவேண்டும். அன்னியமோகம் என்னும் அல்லல் வழி தமிழன் ஆழ்ந்துவிடுகின்றான். சிறிது அங்கிலம் கற்றவுடன் தமிழன் தமிழில் பேசுவதையே குறைவெனக் கருதி நிற்கிறான். அந்தோ! இது அறியாமையின் பாற்பட்டதாகும். தமிழன் மற்றவற்றில் பிறரைப் பின்பற்றுவதுபோன்று, இதனை மாத்திரம் ஏனோ பின்பற்றுவதில்லை. ஒரு வங்காளி மற்றொரு வங்காளியைக் கண்டால் அங்கிலத்திலா பேசுகிறான்? வங்காளி மொழியிலல்லவா! ஒரு குசராத்தி மற்றொரு குசராத்தியைக் கண்டால் அவன் தன் மொழியிலன்றோ உரையாடுகிறான். இன்னும் மற்றுள்ளார் யாரும் தம் நாட்டவரைக் கண்டால் தம் தம் தாய் மொழியிலேயன்றோ உரையாடுகின்றனர். ஆனால், அங்கிலம் கற்று, எல்லாம் அறிந்தவனாகத் தன்னை எண்ணிக்கொள்ளும் தமிழன் மற்றொரு தமிழனைக் காணும்பொழுது அங்கிலத்திலன்றோ பேசுகிறான். தமிழில் பேசுவதும் குறைவென வெண்ணுகின்றானே!

உண்மை நாகரிகத்தின் உணர்ச்சி நோக்கம்—எல்லை இவையாவும் நம் தமிழ் நாட்டிடைப் பண்டைக்காலத்து அமிழ்தென முகிழ்த்துத் தவழ்ந்தது. அவற்றை வள்ளுவர் குறளில்—கம்பன் இராமாயணத்தில்—சிந்தாமணியின் செழுஞ் சுவையில்—இளங்கோவடிகளின் சிலம்பொலியில்—கலித்தொகை முதலிய தொகை நூல்களில் விளங்கக் காணலாம். அந்நாகரிகங்களில் கண்ட புதை பொருள்களை—உண்மை உணர்ச்சிகளை நீங்கள் ஊன்றிக் கவனித்தல் வேண்டும்.

நம் நாடு கிராமங்களால் ஆயது. நம் நாட்டில் இலட்சக்கணக்கான கிராமங்கள் உள்ளன. அவற்றுள் கோடிக் கணக்கான மக்கள் தம் வாழ்க்கையை நடத்துகின்றனர். போதிய கல்வியறிவும், பிறவும் அவரிடம் நன்கு அமையாக் காரணத்தினால்தான் கிராமங்கள் இன்னும் இழிநிலை யெய்துகின்றன. தமிழ் நாட்டுக் கிராமங்கள் தரைமட்டமாக்கப்படுகின்றன. இக்கிராமங்களைக் கண்கொண்டு நோக்கி முன்னுக்குக்கொண்டுவருவது உங்கள் கடமை என்பதை ஈண்டு எடுத்துக்கூற விழைகின்றேன்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கு ஆற்றும் பணியோடு கிராமப் பணியையும் ஒன்றெனக் கொள்ளல் வேண்டும். மேடைப் பிரசங்கத்தில் மட்டும் தங்கள் கடமை முடிந்ததென்றெண்ணும் பலர் இன்று நம் நாட்டில் உள்ளனர். 'சொல்லைக் குறை, செயலைப் பெருக்கு' என்பது உங்களிடம் அமைதல் வேண்டும். உங்கள் வேலைகளிடையே கிராமங்களை நோக்கிச் செல்லுங்கள். கல்வி அறியா மக்களுக்குக் கூடியவரையில் கல்வி அளிக்க வழி செய்யுங்கள். சுகாதார வழியைக் கூடுமான வரையில் பெருக்க முன்வர வேண்டும். ஏழைக்கிராம மக்கள்பெரும்பாலும்விவசாயிகளாகவேஉள்ளனர். அவர்களுடைய விவசாயம் வளர்வதற்கான வழிகளை வகுத்தல் உங்கள் கடைமையாக இருக்கவேண்டும். கிராம மக்கள் தங்களுடைய சுற்றுப்புறங்களிலன்றி நகர்களில் நடக்கும் பலவற்றுள்ளும் கலந்துகொள்ளாதவர்கள். அவர்கட்குத் தற்கால வாழ்க்கையை எடுத்துக்கூறி அவற்றில் நலமுள்ளதைக் கைக்கொள்ள வழி காட்ட வேண்டும். எழுத்தறியாப் பருவத்திலுள்ள யாவருக்கும் உங்களால் இயன்ற அளவு உதவி, கல்விகற்பிக்கவேண்டும். கிராமம் வளர்ந்தால்தான், நாடுவளரும் என்ற கொள்கையைக் கொள்ள வேண்டும். ஆகவே, உங்கள் வாழ்நாட் பணியில் கிராமச் சீரமைப்பும் ஒன்றென உணர்தல் வேண்டும்.

—தமிழ்க்கலை.

II. 1. செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்.
2. சேராத இடத்தில் சேர்ந்தால் வாராத துன்பம் வரும்.
3. சொல்லாது பிறவாது அள்ளாது குறையாது.
4. சோம்பரேன்பவர் தேம்பித் திரிவர்.
5. அடர விதைத்து அழிய உழு.
6. கரைந்த பயிர் இருந்து வளரும்.
7. ஈயுந்தனையும் எருவை; காயுந் தனையும் களைபறி.
8. களை யெடுத்தால் மூளை யெடுக்கும்.
9. களை யெடாதவன் விளைவெடான்.
10. களைபிடுங்காப் பயிர் காற்பயிர்.
11. கோரை குடியைக் கெடுக்கும்.

III. *மரியாதை யென்பது பிறரிடமிருந்து கண்ணியமாகப் பெறவேண்டிய ஒரு காரியமன்றி அடிதடி வம்பு வழக்கினுற் பெறுவதன்று......ஒருவன் தன் முன்னோர்கட்குச் செய்த மரியாதைகளைத் தனக்குச் செய்யவில்லை யென்ருல், அந்த மரியாதையைப் பெறத் தன் முன்னோர்கட்கிருந்த யோக்கியதை தனக்கில்லை யென்று அவன் தெரிந்து கொள்ளுவது நல்லது.*

(இளைஞருக்கு ஆலோசனை) மு. சின்னையா செட்டியார்.

(ஐயா சிறு பெண் என்ற மெட்டு)

IV. அம்மா பெற்ற தாய்மாரே பள்ளிக் கனுப்பக்கூடாதா
சும்மா திரியும் பெண்கள் கல்வி படிக்கக்கூடாதா
கல்வி அறிவு வராதா—வீட்டுக் கணக்கெழுதாதா.
ஆண்கள் மட்டும் படிக்கப் பள்ளிக் கனுப்புகின்றீர்கள்
பெண்கள் படித்தும் பயனில்லையென்று தடுக்குகின்றீர்கள்
மேனாட்டுப் பெண்கள் பாருங்கள்—சமமாய்ப் படித்து வாரார்கள்.
ஆணுக்குப் பெண் அடங்கி நடக்கப் படிக்காமல் செய்தார்
அடித்து உதைத்துக் கொன்றாலும் வாய் பேசாது செய்தார்
விலைக்கு விற்றிடச் செய்தார்—சமயல் செய்திடச் செய்தார்.
பெண்கள் என்ற கண்மணிகளைக் கெடுத்துவிட்டார்கள்
பேரிந்தியாவில் படிக்காமலே தடுத்துவிட்டார்கள்
புராணத்தில் எழுதிவிட்டார்கள்—அடுப்பூத வைத்துவிட்டார்கள்.
அடிமையென்ற பேச்சை இன்றே டொழித்து விடுங்கள்
மனைவியென்பது துணைவியென்று அறிந்துகொள்ளுங்கள்
ஔவையார் படித்தபெண்ணுங்கள்—செவ்வையாய்ப் படிக்க வையுங்கள்.
படித்துஉத்தி யோகம்செய்யப் போருயா என்பார்
துரைத்தனம் போன்ற குடித்தனத்திற்கும் படிப்பவசியம்பார்
சிக்கனச் செலவெழுதி வைப்பார்—மக்களும் நல்வழி நடப்பார்.
அடுப்பையூதும் படிப்பைக் கற்ற அம்மா மார்களே
அவ்வயதுப் பெண்களைப் பள்ளிக் கனுப்புவீர்களே
அத்தனம் விடுகுவீர்களே—அன்புடனே வாழுவீர்களே (அம்மா)

திவ்வியநாதன்.

ஆசிரியர் திரு. ஜெகவீரபாண்டியன் அவர்கள்

மதுரையில் இருந்து நடத்தி வரும் "**புலவர் உலகம்**" என்னும் மாத சஞ்சிகையைப் பற்றி

மதுரை வித்வான் ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதிய அபிப்பிராயம்

கவி.

ஜெகவீர பாண்டியனார் திருப்புலவர் உலகமெனும் தெளிந்த நூலை
அகனமர்ந்து நான்படித்தேன் அங்ஙனமே எனைமறந்தேன் அதற்கப்பாலோர்
*ககனறிஞர்க் கெனமதிக்கும் கம்பரையும் கண்டவர்தங் கவிக்கானுர்ந்து
†மகமலரின் மடல்விரிந்து வருமமுதின் வகைநுகர்ந்து மகிழ்ந்தேன் மன்னோ!

கம்பரைப்போல் வள்ளுவர்போல் கவிச்சுவைகொள் ஜெகவீர கற்றுரைப்போ
இம்பரின்கண் சிலர்பலராய் இருப்பரெனில் இவ்வுலகே எனக்குமேலாம்
நம்பகமார் பேரவையில் நானுமவ ருடனிருக்கும் நாளொன்றானால்
வம்படரும் மனுப்பிறவி வருகவினும் வரிற்பெரிது மகிழ்வேன் மாதோ!

செந்தமிழ்ப் புலமைவாய்ந்த ஜெகவீர பாண்டி வள்ளல்
நந்தமிழ்க் கம்பர்யாத்த கற்கவி யுரைகா ணின்பம்
உந்தமிழ் ஆற்றே என்கோ! உயர்தெளி நதியே என்கோ!
வந்தமர் கடலே என்கோ! மற்றென்கோ வரைகுவாமே!

ஆவியும் உடலும்போல அணிபொருள் சொல்லாராய்ந்து
காவியம் ஒன்று தந்தார் கம்பரக் கடலில் நீந்தி
ஜீவிய அமுதா ராய்ந்து ஜெகவீர பாண்டியன்நம்
நாவினி னுகரத் தந்தார் நமக்கொரு விருந்து மாதோ!

இனித்ததமிழ் இனிக்குந்தமிழ் இனியதமிழ் என்றுலகு
தொனித்துவரும் வாய்மைதனில் தோன்றிடுமோ ஐயமினி
ஜெனித்தபுகழ் படைத்தகலை ஜெகவீர பாண்டியனார்
தனித்ததமிழ் நடையழகு தானுகர்ந்த பின்னருமே!

பேர்பெரிய வள்ளுவரும் பிறங்குகவிக் கம்பருமே
ஏர்பெரிய நந்தமிழுக் கேற்றகதி என்பதுபோல்
[illegible]பெரிய ஜெகவீர பாண்டியனிங் கவ்விருவர்க்
[illegible]பெரிய கதிஎனவும் உள்ளுகந்து வாழ்த்துதுமே.

---

*ககன் - சூரியன்; †மகம் -

1942-ஸு—மே மீ
சித்திரபானு ஸு சித்திரை—வைகாசி மீ கொல்லம் 1117-ஸு

திதி, நட்சத்திரம், தியாச்சியம் முதலியவை.

இ.			த.	கிழ.	
1			19	வெ	பிர-50-48, சுவா-8-36-திவி-21-46.
2			20	சனி	துதி-44-58, விசா-5-1, திவி-14-21.
3			21	ஞா	திரு-38-57, அனு-1-0, கேட்-55-54, திவி-14-3. தீ நாள் தொடக்கம்.
4			22	திங்	சது-32-54, மூல-52-51, திவி-14-53.
5			23	செ	பஞ்-26-56, பூரா-49-5, திவி-15-21.
6			24	புத	சட்டி-21-30, உத்திரா-45-50, திவி-8-0, ரா-24-34.
7			25	வியா	சப்-16-44, திருவோ-43-9, ரா-22-1.
8		சித்திரை மீ	26	வெ	அட்-12-35, அவிட்-41-18, ரா-28-4.
9			27	சனி	நவ-9-18, சத-40-3, சேடம்-2 40, ரா-25-21.
10			28	ஞா	தச-7-9, பூரட்-40-40.
11			29	திங்	ஏகா-6-5, உத்திரட்-42-8, திவி-5-16, ஏகாதசி.
12			30	செ	துவா-6-23, ரேவ-44-50, திவி-13-15, பிரதோடம்.
13	மே மீ		31	புத	திரயோ-7-57, அசு-48-45, ரா-7-10.
14			1	வியா	சதுர்-10-45, பர-53-42, திவி-15-14, ● அமாவாசை.
15			2	வெ	அமா-14-32, கார்-59-35, திவி-26-38, கார்த்திகை.
16			3	சனி	பிர-19-4, உரோ-60-0, ரா-12-50.
17			4	ஞா	துதி-23-56, உரோ-5-53, திவி-21-23.
18			5	திங்	திரு-28-49, மிருக-12-18, திவி-24-25.
19			6	செ	சது-33-20, திருவா-18-25, ரா-20-10, சதுர்த்தி.
20			7	புத	பஞ்-37-10, புனர்-23-38, ரா-14-19, கரிநாள்.
21			8	வியா	சட்டி-39-59, பூச-28-34, சட்டி.
22			9	வெ	சப்-41-37, ஆயி-32-4, திவி-2-26.
23			10	சனி	அட்-41-58, மக-34-17, திவி-3-11, ரா-23-33.
24			11	ஞா	நவ-41-3, பூர-35-19, ரா 17-12.
25			12	திங்	தச. 39-0, உத்தி-35-11, ரா-25-45.
26			13	செ	ஏகா-35-47, அத்-34-9, சித்-26-50, ரா–22-15, ஏகாதசி.
27		வைகாசி மீ	14	புத	துவா-31-41, சித்-31-44, ரா-13-58, பிரதோடம்.
28			15	வியா	திரயோ-26-49, சுவா-28-49, ரா-10-54.
29			16	வெ	சதுர்-21-21, விசா-25-18, ரா-3-34, ○ பௌர்ணமி.
30			17	சனி	பௌ-15-33, அனு-21-27, ரா-3-25, கரிநாள்.
31			18	ஞா	பிர-9-30, கேட்-17-22, ரா-4-55.
1			19	திங்	துதி-3-21, திரு-54-0, மூல-13-17, [illegible]-4-35.
[illegible]			20	செ	சது-51-52, பூரா-9-22, ரா-28-13.
			21	புத	பஞ்-46-57, உத்திரா-5-55, திவி-15-27.
			[illegible]	வியா	சட்டி-42-44, திருவோ-3-5, திவி-12-45
				[illegible]வ	சப்-39-23, அவிட்-1-0, சத-58-49, திவி-18-39.
					அட்-37-4, பூரட்-59-50, திவி-15-5.
					[illegible]-35-59, உத்திரட்-60-0, திவி-24-20.
					[illegible]6-7, உத்திரட்-1-4, ரா-1-8.

ஜ

Regd. No. 4120.

அன்புநிலை

தேடும் பருவமிது கண்டீர் ; சேரவாரும், செகத்தீரே.—தாயுமானவர்.

"கிராம தூதன்."

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

கிராம முன்னேற்றமே, தேச முன்னேற்றமாகும். கிராம முன்னேற்றத்திற்கும் நகர வாசிகள் சுக வாழ்விற்கும் அவசியமான விபசாயம், கூட்டுறவு, கைத்தொழில், குடிசைத்தொழில், கல்வி, சுகாதாரம், குடும்ப வாழ்க்கை பற்றிய பல நல்லுரைகளும், கதைகளும், மற்றும் கிராம வாசிகள், விபசாயிகளுக்குப் பிரயோசனமான செய்திகளும், அறிவுரைகளும், பஞ்சாங்கம் முதலியனவும் பிரதி அங்கிலமாதம் முதல் ஐந்து தெய்திக்குள் இந்தப் பத்திரிகையில் வெளி வரும். இதைப் படித்து, இதில் காணும் நலங்களைப் பிறர்க்குச் சொல்லுங்கள். சந்தேகம் தோன்றினால், குறை ஏதும் கண்டால் பத்திராதிபருக் கெழுதுங்கள்.

வி. பி. தபாலினால், சந்தாதாருக்கு அனாவசியமாகத் தபாற்செலவு அதிகமாவதால், இந்தப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை. சந்தா முன் பணமாகச் செலுத்தியிருக்கும் காலம்வரைக்கே பத்திரிகை யனுப்பிவரப்படும்.

பத்திராதிபர்.
இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

பிரசுரகர்த்தர்.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

உள்நாட்டு வருடச்சந்தா	...	ரூ	1—8—0	ஒரு பக்கம் விளம்பரம் ஒரு தடவை	10—0—0
வெளி ,,	...	ரூ	2—0—0	அரைப்பக்கம் ,,	6—0—0
தனிப் பிரதி விலை	...	ரூ	0—2—0	கால்பக்கம் ,,	3—0—0

1-வது மலர் (1939-ம் ஆண்டு ஒத்திய 12 இதழ்கள்) 2-வது மலர் (1940-ம் ஆண்டு ஒத்திய 12 இதழ்கள்) 3-வது மலர் (1941-ஆண்டு ஒத்திய 12 இதழ்கள்) பைண்டு செய்து சில பிரதிகளேயிருக்கின்றன. தனித்தனி விலை ரூ. 1—4—0

கால்நடைச் சந்தைகளும் விபசாயக் கண்காட்சிகளும்

(மே-ஜூன் மாத பஞ்சாங்கம் உட்பக்கம் பார்க்க.)

தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை தோறும் கால்நடைச் சந்தை நடைபெறுகிறது. திரிசிராப்பள்ளி சில்லா கரூர் தாலுகா உப்பிடமங்கலத்திலும் உடையார்பாளையம் தாலுகா அரியலூரிலும் ஞாயிற்றுக் கிழமை தோறும், கரூர் தாலுகா பரமதியிலும் முசிரித் தாலுகா நொட்டியத்திலும் செவ்வாய்க்கிழமை தோறும், குளித்தலைத் தாலுகா மணப்பாறையில் புதன்கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடைபெற்று வருகின்றன. கோயம்புத்தூர் தாலுகா துடியலூரில் திங்கட்கிழமை தோறும், கோபிச்செட்டி பாளையம் தாலுகா புளியம்பட்டியிலும் பொள்ளாச்சியிலும் வியாழக்கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடைபெற்று வருகின்றன.

தென் ஆர்க்காடு சில்லா திருக்கோயிலூர் தாலுகா கூவகத்தில் எப்பிரல் மே மாதங்களில் 20 நாட்களும் பரிக்காலில் மே மாதத்தில் 12 நாட்களும் கால்நடைச் சந்தைகள் நடைபெறும். மதுரை சில்லா பெரியகுளம் தாலுகா வீரபாண்டியில் மே மீ 6-ம் உ யிலிருந்து 15 நாட்களும் நிலக்கோட்டையில் மே மீ மூன்றும் வாரத்திலும் கால்நடைச் சந்தைகள் நடைபெறும். கோயம்புத்தூர் சில்லா பல்லடம் தாலுகா திருப்பூரில் மே மாதத்தில் கால்நடைச் சந்தை நடைபெறும்.

Printed at the Excelsior Power Press, North Chitrai St., Madura. 42.